சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் —"குறள்"

பிரதி சனிக்கிழமை வெளிவரும்

தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும்;
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்;
தொடர்ந்து சொல்வேன்!
ஏற்றதொரு கருத்தை என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும்
நில்லேன்; அஞ்சேன்!"

உள் நாடு (இலங்கை உட்பட விலை இரண்டணா

வெளி நாடு மூன்றணா.

மலர் 1 | சென்னை 31—7—1954 சனி | இதழ் 6

இது பொறுப்பதில்லை! ... ...
... ... தம்பி! எரிதழல் கொண்டுவா!

1938-ம் ஆண்டு....!

நாஜிசத்தின் நடு நாயகம்—அழுக்குப்படா மேனியரின் செருக்குக் கொண்ட பாதுகாவலர்—பஜகோவிந்தப் பண்பாடும் பழமைப் பாடகர்—தோழர் ஆச்சாரியார் அவர்கள், கன்னல் மொழியாம் — செழுந்தமிழாம்—நம் தாய் மொழியாம் — நறுந் தமிழ் பூந்தோட்டத்தில், இந்தியென்னும் நச்சுப் பாம்பைக் கொண்டு விட்டார்! தமிழ் மணத்தை மேதினியார் அனுபவிக்கக் கூடாது என்பது மட்டுமல்ல, நறுமணத்தை வாரி வீசும் பூந்தோட்டத்தையே நச்சுப் புற்றுக்கக் கங்கணம் கட்டினார்—கட்டின கங்கணத்தை அவிழ்க்க இரு திராவிட இளைஞரேறுகள் உயிர் பலி தந்தார்கள்...தாலமுத்து நடராசன்!

1948-ம் வருடம்....!

நாட்டைக் கொள்ளையடித்த வெள்ளைக்காரர்கள் தாயகத்தை விட்டு வெளியேறிய பின், வீட்டுக் கொள்ளையடிக்க மாட்டுப் பெட்டி மகிபர்கள் ஆரசபீட மேறியவுடன், திராவிட இனத்தார் எமது அடிமைகள்—அவர்கள் பேசுவது கடை மொழி—இழிமொழி—என உலகுக்குச் சொல்வது போல, இரு உயிர் குடித்த பிறகு, உடல் கொடுத்தவுடன் ஆச்சாரியார் அவிழ்த்த கங்கணத்தை — முன்னாள் சென்னை மாநில முதலமைச்சர் இராமசாமி ரெட்டியாரைக் கொண்டு கட்டச் செய்தார்கள்! ஆம்....அவிழ்க்கப்பட்ட கங்கணம் மீண்டும் கட்டப்பட்டது! அடித்து விரட்டப்பட்ட நச்சரவம் மீண்டும் புகுத்தப்பட்டது! 'கட்டாய இந்தி' படித்தால்தான் பதவி கிடைக்கும்; இதை அறிந்தால் அந்தஸ்து உயரும் என, சென்னை சர்க்காரின் மூலம் அறிவித்தது வட நாட்டு ஏகாதிபத்தியம்!

தாய் மொழிக்குத் தருக்கர் பூட்டப்பட்ட அடிமைத்தளையை உடைத்தெறிய குமுறியெழுந்து விடுதலைப் பட்டாளம்! வட நாட்டு ஏகாதிபத்தியம் சிறிது குனிந்து கொடுத்தது...கட்டாய இந்தி இல்லை, அவரவர்கள் விருப்படி கற்கலாம் என பேசியது. ஆனால்—

டெல்லி ஆட்சி. மன்றத்தில் இருக்கும் லால் பகதூர் சாஸ்திரி போன்ற அமைச்சர்களுக்கு ஏற்பட்டிருக்கும்இந்திவெறியுணர்ச்சி பிற மொழியாளர் தன்மான உணர்ச்சியை கேலி செய்கிற அளவில்—பிறமொழிகளின் மீது பலவந்தமாக உதவாக்கரை இந்தியை ஆதிக்கம் செலுத்தவிட்டு பல்வேறு மொழிகளைக் கொண்ட இந்தியத் துணைக் கண்டத்திற்கு உளுத்துப்போன இந்தியை அரசாங்க மொழியாக்கி, அதை தாய் மொழியாகக் கொண்டிருக்கும் மக்களால், வேறு மொழி பெற்றிருக்கும் மக்கள் என்றென்றும் அடிமைகளாக நிலைத்திருக்க வேண்டுமென்ற ஆதிக்க எண்ணத்தில்—டில்லி ஆட்சியினரின் போக்கிலே — அவர்கள் நடப்பிலே — கலந்திருக்கும் மொழியாதிக்க விஷக்காற்றை நாம் கண்டித்து வருகிறோம்.

பல மொழிகளின் மீது ஒரு மொழியின் ஆதிக்கம்-இதுதான் ஏகாதிபத்திய எத்தர்கள் செய்யும் சதிவேலை! தமிழ் மொழியின் மீது இந்தி மொழியின் ஆதிக்கம் — இதுதான் தென்னவரை தொன்று தொட்டு உலக சரித்திரம் முடியும் வரையில் அடிமைகளாக இருக்கச் செய்ய வட நாட்டு ஏகாதிபத்தியவாதிகளால் பின்னப்படும் வஞ்சகவலை! அந்த வஞ்சக வலையில் தென்னவர் விழுந்தால் இன்று கொஞ்சம் மிச்சம் மீதி வைத்திருக்கும் திராவிட கலாச்சாரத்தை — அதன் புகழொளியை—இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடும்! பேசப்படும் தாய் மொழியின் மூலமாகத்தான், கலை, கலாச்சாரம், பண்பு, குணம், மனம்—எல்லாம் அமைகிறது என்பதை எவரும் ஒப்புக் கொள்ள தயங்கார்! எனவே, நம் தாய் மொழியைத் தீய்த்து இந்தி மொழியின் கலாச்சாரத்தைப் புகுத்தி நம் இதயத்தை அடிமையென்னும் நச்சுப் புற்றாக்க முயலுகிறது வடவர் ஆட்சி—இதுதான் ஏகாதிபத்தியத்தின் அறிகுறி!

அதன் எதிரொலியாகத்தான் வடவர் சிறுகச் சிறுக சிங்காரத் தமிழ் மலர் பூத்த நம் தாயகமாம் பளிங்கு நீர்ப்பொய்கையிலே இந்தி எருமையை விட்டு கலக்கி வருகின்றனர். திராவிடத்திலிருக்கும் ஒவ்வொரு புகைவண்டி நிலையங்களிலும், அஞ்சல் நிலையங்களிலும் தபால் தலைகளிலும் இந்தி ஆதிக்கம் புரிகிறது! நாட்டையும் நாட்டு வளத்தையும், சுதந்திரத்தையும் சுந்தர வாழ்க்கையையும் பறிகொடுத்திருக்கும் நாம், தாய் மொழியையும் பறிகொடுக்க வேண்டிய நிலையிலிருப்பதை எந்த தன்மானமுள்ள திராவிடனும் மனந்துடிக்காமலிருக்க மாட்டான்!

டெல்லியின் இந்தி மொழி ஆணவத்தை முறியடிக்க மிகப் பெரிய போராட்டம் நடத்தியே ஆகவேண்டும். நடத்தாமலிருக்க வடவர் விடப்போவதுமில்லை. தமிழகத்தில் — வடவர் மெல்ல மெல்ல புகுத்தி வரும் இந்தியின் ஆதிக்கத்தை ஆதரிப்போரை—ஆதரிப்போரின் சீமான்களை—எச்சரிக்கை செய்கிறோம்: திராவிடர்கள் புலிப் பற்களைப் பிடுங்கியவர்கள்! உங்கள் புல்லர் தனத்தையும் கிள்ளி எறியாமலிருக்க மாட்டோம் — என டெல்லி ஏகாதிபத்திய எத்தர்களுக்கு எச்சரிகை விடுக்கிறோம்!

'அன்பன்'

விற்பனையாகிறது

★

* சுவையான கதை!
* வளமான நடை!
* அழகான பதிப்பு!
* பயனுள்ள படைப்பு!

விலை ரூ. 1-0-0

★

தபால் செலவு தனி.

வியாபாரிகளுக்கு
25 சதவிகிதம் கமிஷன்

★

அருணோதயம்
சென்னை - 14.

செப்டம்பர் இதழில் கண்ணதாசன் எழுதும்
தொடர் கதை ஆரம்பமாகிறது.

எண்ணம்

கண்ணதாசன்

தென்றலுக்கு வரவேற்பு; நாம் எதிர்பார்த்ததற்கு மேலாக பிரமாத வரவேற்பு! தினமும் வரும் ஆயிரக்கணக்கான கடிதங்கள், நம்மைப் பேரானந்தத்தில் ஆழ்த்துகின்றன. தலையங்கம் புதுமை என்கிருர்கள் சிலர்; இலக்கியத்தில் காதல் அற்புதம் என்கிருர்கள் சிலர்; நாடகங்கள் நன்ருக இருப்பதாக சிலர் தீர்ப்பு; கவிதைகள் அதிகம் வேண்டும் எனச் சிலர் ஆசை; சிறுகதைகள் ரசிக்கத்தக்கவை எனச் சிலர் எண்ணம். இப்படியாக தென்றல் திராவிட மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றுவிட்டது! நாம் பெரு மகிழ்வு அடைகிருேம். குழந்தை தவழுமா என்று சந்தேகப்பட்ட தந்தை, அது எழுந்து ஏறு நடை போடக்கண்டால் எவ்வளவு மகிழ்வாரோ அவ்வளவு மகிழ்ச்சி!

* * *

நாம் பயந்ததுண்டு. தமிழை நாம் கையாளுகிற முறை திராவிட மக்களால் வரவேற்கப்படுமா என்று ஐயப்பட்டதுண்டு. இயக்கத்திலுள்ள சகோதரர்களின் 'ஓசை நடை'யிலிருந்து மாறுபடுகிருேமே, இது மக்களுக்குப் பிடிக்குமா என்று நினைத்ததுண்டு எல்லாம் பிடிக்கிறது; ரொம்பப் பிடிக்கிறது; இந்த எளிமைக்கு பெரும் வரவேற்பிருக்கிறது என தோழர்களின் கடிதங்கள் கூறுகின்றன. உண்மையில், நடையை மாற்றிப் பார்ப்போமே என்று நாம் ஆசைப்பட்டோமே தவிர, ஓசை நடையில் நமக்கு வெறுப்பில்லை. அந்த நடையில் நாம் எழுத முயன்ருலும், அது 'காப்பி'யாகத்தான் இருக்கும். அண்ணுவின் தமிழ் நடை அவர்க்கே உரியது. அதை மற்றவர்கள் பின்பற்றி 'ஓசை நடை'யாக மாற்றிக்கொண்டார்கள். ஆகவே நாம் மாறுபட்டது, புது முறையில் ஏற்பட்ட ஆசையால்தான். ஓசை நடையில் நீங்கள் எழுதக்கூடாதா என்று எழுதிக்கேட்ட நண்பர்களுக்காகவே இதைக் கூறுகிறேன்.

* * *

கருத்துக்காகவே மொழி; சொலல் முயற்சியில் தெளிவிருக்க வேண்டும் — இது அண்ணுவின் முறை. இதைப் பாடமாக வைத்துத்தான் நாமும் நமது நடையை கணித்துக்கொண்டோம். கருத்துக்களைச் சொல்வதற்கு–முழுமை பெறவைப்பதற்கு-இது வசதியாக இருக்கிறது. நிற்க.

* * *

பன்னிரண்டு பக்கங்கள்போட்டு இரண்டணுவுக்குக் கொடுக்கிறீர்களே, இது கட்டுமா?' என்று ஒரு நண்பர் வினவுகிருர். கட்டவில்லை; நஷ்டம்தான் வருகிறது.

'போட்டிக்காகப் போடுகிறீரா?' என்று கேட்கிருர் ஒரு தோழர். இல்லை! யாரோடும் போட்டி போடவேண்டிய அவசியம் நமக்கு இல்லை, இயக்க சகோதரர்களுள் நிச்சயமாக போட்டி வராது. நிறையக் கொடுக்கவேண்டும் என்று ஆசை; அதற்காகவே நஷ்டத்தில் தொழில் நடக்கிறது.

ஏஜண்டுத் தோழர்களைப் பற்றி எல்லாப் பத்திரிகைகளுமே புகார் கூறுகின்றன. பல பத்திரிகைகள் ஏஜண்டுகளாலேயே மூடப்பட்டு விட்டன. நமக்கு இன்று வரை அந்தத் தொல்லை இல்லை. நமது ஏஜண்டுகளுக்கு நன்றி. இந்த நாணயத்தை இடைவிடாமல் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்ற ஆசையை இந்தச் சமயத்தில் வெளியிட்டு வைக்கிருேம். வாராவாரம் பத்திரிகை விற்பனை ஏறுகிறது. பத்திரிகையின் இந்தத் தரத்தை இடைவிடாமல் கடைப்பிடிக்குமாறு ஏஜண்டுத் தோழர்கள் கோருகிருர்கள், கடைப்பிடிப்போம்! சாவிலும் தமிழ்கூறிச் சாகவேண்டும்; நம் சாம்பல் தமிழ் மணந்து வேகவேண்டும் — இது நமது வற்ருத ஆசை, தென்றல் தரங்குறையாது.

* * *

இளம் எழுத்தாளர்களுக்கு நிறைய இடம் வேண்டும் என்று கேட்கிருர் ஒரு நண்பர். கொடுக்கத்தான் ஆசைப்படுகிருேம். இளம் எழுத்தாளர்களிடமிருந்தும் சில அறிமுகமான எழுத்தாளர்களிடமிருந்தும் கதை கட்டுரைகள் வந்துள்ளன, முழுவதும் படித்துப் பார்த்தோம். உண்மையைச் சொல்கிருேம்—மனதிலே திருப்தி இல்லை. நடை அழகுக்காக, கருத்தை அந்தரத்திலே விட்டு விடுகிருர்கள். ஒரு வரி விஷயத்தையே திரும்பத் திரும்ப பதினெட்டு வரியில் கூறுகிருர்கள். ஐயோ! வெறும் சொற்குவியல்! இதுவேண்டாம். பழைய திராவிட நாடு இதழ்களையும், புதிய இதழ்களையும் படித்துப்பாருங்கள்; பிறகு எழுதுங்கள்—தெளிவு கிடைக்கும் அதைத் தென்றலுக்கு அனுப்புங்கள்; ஆனந்தமாகப் பிரசுரிக்கிருேம். நமது இயக்கத் தலைவர்கள் அத்தனைபேரும் கருத்தோடு எழுதுகிருர்கள்; அதை அழகு படுத்துகிருர்கள். இதை இளம் எழுத்தாளர்கள் மறந்து விட்டு அழகைமட்டும் எடுத்துக்கொள்கிருர்கள். அதாவது, உடலை எடுத்துக்கொள்கிருர்கள்; உயிரை விட்டுவிடுகிருர்கள். இது பயனற்றது; இதை நாம் ஆதரிக்கவும் முடியாது.

* * *

ஒரே ஒரு வேண்டுகோள். இதை நீங்கள் நிச்சயம் நிறைவேற்ற வேண்டும். அதாவது சந்தாதாரராகச் சேரவேண்டும். தென்றல் உங்களைக் கவர்ந்தால், இதன் வளர்ச்சியில் உண்மையில் உங்களுக்கு ஆசை இருந்தால், ரூபாய் ஆறு வருட சந்தா அனுப்புங்கள்! தானம் வேண்டாம்; சந்தாதான் வேண்டும்.

* * *

செப்டம்பர் பதினேராம் தேதி மலரிலிருந்து 'தென்றல்' புது விஷயங்களை—புது முறையில்—இன்னும் அதிகமாகத் தாங்கி வரும். வரலாற்று நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்ட தொடர்கதை ஒன்று வெளிவரும். வெண்பாவின் ஈற்றடி கொடுத்து முழுப்பா எழுதக்கோரி, பரிசில் வழங்கப்படும். இன்னும் எவ்வளவோ செய்ய ஆசை; இதற்கு உங்கள் ஒத்துழைப்பு தேவை! *

ஐயோ! எழுதாமற் போனேனே!

ஆண்டிரி மராய் என்ற பிரபல பிரெஞ்சு எழுத்தாளர், 1935-ஆம் ஆண்டு ஒரு நாள், தற்பொழுது பிரிட்டிஷ் பிரதம மந்திரியா யிருக்கிருரே, அந்த வின்ஸ்டன் சர்ச்சிலை ஒரு விருந்தின்போது சந்தித்தாராம்.

''நண்பர் மராய்! இனி நீங்கள் நாவல்கள் எழுதிக் கொண்டிருக்கக் கூடாது. இல்லை; கூடாது. ஜீவிய சரித்திரங்களும் எழுதிக்கொண்டிருக்கக் கூடாது. வேண்டாம்: கூடாது'' என்று திடுதிப்பென்று கூறினுர் சர்ச்சில்.

ஆசிரியர் மராய் ஆச்சரியத்துடன், சர்ச்சிலின் முகத்தை உற்று நோக்கினுர்.

''இப்பொழுது நீங்கள் என்ன எழுதவேண்டுமென்ருல்,'' என்று தொடர்ந்துரைக்கலானுர் சர்ச்சில்: ''தினம் ஒன்றுக்கு ஒரு கட்டுரை எழுதவேண்டும். தினம் ஒரே விஷயத்தைப்பற்றித்தான். வெவ்வேறு வார்த்தைகளைக் கொண்டு வெவ்வேறு விதமாய், உங்கள் சொற் சாதுர்யம் முழுவதையும் செலுத்தி. அதை எழுதவேண்டும். பிரெஞ்சு விமானப் படை, உலகில் நாலாவது ஐந்தாவது ஸ்தானத்துக்கு நழுவிக் கொண்டிருக்கிறது. விமானப்படையே யில்லாத ஜெர்மனியில் தோன்றியுள்ள விமானப்படையோ, உலகிலேயே முதல் ஸ்தானத்தைப் பெற்றுவருகிறது. இந்த உண்மையை, நீங்கள் பிரெஞ்சு ஜனங்களுக்குச் சொல்லவேண்டும். ஒரு பெண்ணின் காதலையோ, ஒரு மனிதனின் ஆசைகளையோ நீங்கள் வர்ணிப்பதைவிட, இது மகத்தான பெரிய சேவையாகும்.''

இந்தச் சம்பாஷணையை இப்போது வெளியிட்டுள்ள அந்த ஆசிரியர் மராய், ''சர்ச்சில் சொன்ன கட்டுரைகளை நான் எழுதாமற் போய்விட்டேன். அதற்கு மிக மிக வருந்துகிறேன்'' என்று குறிப்பிடுகிருர்.

இனி வருந்தியென்ன, வருந்தாமற் போயென்ன? அந்தப் படைப்பலக் குறைவால், நாடு தலை பணிந்துவிட்டது. ஆனுல், இதனின்றும் நம் இந்திய ஆசிரியர்கள் ஏதாவது படிப்பினை பெறலாமோ.

விற்பனையாளர்களுக்கு

அறிவிப்பு.

'தென்றல்' பிரதிகளை அதிகப்படுத்த எண்ணுவோர் ஒரு வாரம் முன்னதாகவே காரியாலயத்திற்கு தெரிவிக்க வேண்டுகிருேம்.

'நிர்வாகி'

தென்றல், சென்னை-14

'இல்லற ஜோதி' படத்தில் வரும் 'அனார்கலி' நாடகம் யார் எழுதியது என்று நண்பர்கள் கேட்கிருர்கள். ஏராளமான கேள்விகள் அது பற்றியே வந்துள்ளன. அது நண்பர் கருணுநிதி திருத்தி எழுதியது.

நான் செஷன்ஸ் கோர்ட் தீர்ப்புக்காக திருச்சி செல்ல வேண்டி நேர்ந்தபோது, தீர்ப்பு பாதகமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில், நண்பர் கருணுநிதியிடம், நான் எழுதிய அனர்கலியைக் கொடுத்து மாற்றிக் கொடுக்கக் கோரினேன். அதை மாற்றி எழுதி தோழர் கருணுநிதி கொடுத்தாராம். நான் எழுதிய நாடகம் இதுதான். திரைக்கென எழுதியதால் சிலஇடங்களில் என் மனச்சாட்சிக்கு பிடிக்காத 'நடை' கூட கையாண்டிருக்கிறேன். முன்பு எழுதியதை அப்படியே வெளியிட்டுள்ளேன்; போன இதழிலும் இந்த இதழிலும். இந்த நாடகத்தில் எங்காவது வெடி வெடித்தால், அது சினிமாவுக்காகத் தயாரிக்கப்பட்ட சீன வெடி என்று கருதிக்கொள்ளுங்கள்.

காட்சி: 3.

அனர்கலி இல்லம்.

[கண்ணீர் வெள்ளத்தில் இருக்கிருள், அனர்கலி. அன்போடு, "அனர்!" என்று அழைத்தபடி வருகிருன் சலீம். அனர் எழுந்து...]

அனர்: *வருக வருக! இள மனதை வேக வைத்த ஏந்தலே வருக! சாம்ராஜ்ய அதிபதியே வருக! டில்லி மகுடத்தின் வாரிசே வருக! ஏழை அனர்கலிக்கே இதயமென்று கூறி விட்டு, இதயத்திலே மகுடத்தை அணைத்துக் கொண்டிருக்கும் இளவரசே வருக!*

[என்று கூறிக் கலங்குகிருள்.]

சலீம்: *(திடுக்கிட்டு) மகுடம்! இளவரசு! யார் சொன்னர்கள்....?*

அன: *(திரும்பி) இல்லே! இளவரசில்லே! சிப்பாய்தான்! இன்னும் பொய் கூறுங்கள். அப்போதுதானே அனரை இன்னுங் கொஞ்ச நாள் ஏமாற்றலாம்! பொய் உங்கள் மாளிகையின் பொக்கிஷச் சரக்காயிற்றே! உங்களே மட்டும் அது விட்டு விடுமா? மது இருக்கும் வரை தானே கிண்ணத்திற்கு மதிப்பு உங்கள் மாளிகையிலே! அப்படித்தானே நினைத்தீர்கள் அனரையும்?*

[அவன் அருகில் வந்து இரண்டு கைகளாலும் அவன் சட்டையைப் பிடித்துக் கொண்டு]

இளவரசே! நான் மாளிகை ராணியாகவா ஆசைப்பட்டேன்! கூட கோபுரங்களில் கொஞ்சித் திரியவா என் பிஞ்சு மனம் பேராசைப்பட்டது? கண்ணுடி சலீம் அகம்; அதில் காணப்படும் அனரின் முகம் என்பதைத் தவிர களங்க நினைவுண்டா இந்த காதகியிடம்! ஏன் பொய் சொன்னீர்கள்? எதற்காகப் பொய் சொன்னீர்கள்? ஏமாற்றிக் கெடுக்கவா? உங்கள் மாளிகையின் சவக் காட்டில் மற்றெரு உடலே அடக்கம் செய்யவா? சொல்லுங்கள்! சொல்லுங்கள்!

சலீம்: *(கண்ணீரோடு) அனர்! என் இதயம் திறந்து சொல்கிறேன் ஒரு சொல்! இளவரசன் என்ருல் எங்கே பயந்து விடுவாயோ என்றுதான் சிப்பாய் என்றேனே தவிர அடுத்துக் கெடுக்கும் ஆசை துளி கூட இல்லே.*

அன: *பயந்து விடுவேன் என்றல்ல; மறுத்து விடுவேன் என்று! இணங்க மாட்டேன் என்று! பசியாற இந்தப் பாவை உடன்படமாட்டேன் என்று! அப்படித்தானே?*

சலீம்: *அனர்! இப்போது என்ன சொன்னுலும் உன் செவியில் ஏருது! ஒன்று சொல்கிறேன்....அனர்கலியிடம் சலீம் கொண்டது உண்மையான அன்பு என்பதை...இதயத்தில் இடம் பிடித்தது என்றும் அருகில் வைத்துக் கொள்ளத்தான் என்பதை...கைதொட்டதும் மெய் தொட்டதும், கறை படுத்தித் தூக்கி எறிய அல்ல என்பதை....பீறிட்டெழும் ரத்தம் பேசிக் காட்டும் உனக்கு! இதோ!*

[என்று கத்தியை எடுத்து மார்பில் பாய்ச்சிக் கொள்ள முயற்சிக்க, அனர் தன்னே மறந்து 'சலீம்!' என்று அவன் மார்பில் சாய்ந்து விடல். உடன் சலீமின் கைகளிலிருந்து கத்தி தானே நழுவி விழல். அப்போது, ராஜா மான் சிங், சில சிப்பாய்களுடன், பிரவேசித்து.]

ராஜா: *உங்களேக் கைது செய்ய அரண்மனே உத்தரவு!*

சலீம்: *நன்று! அமைச்சரே வருகிருேம்! அனர்! வேளே பிறந்து விட்டது! வழி திறந்து விட்டது! சாவு நமக்கு ஒரே நேரத்தில் வரும்! வா! பிறையே வா!*

[என்று அவர்களுடன் செல்லல்.]

காட்சி: 4.

அக்பர் நீதி மன்றம்.

[அக்பருடைய தனி நீதி மன்றம், அக்பரும் ராஜா மான்சிங்கும். ஒரு சிம்மாசனம். அதற்கு வலது பக்கத்தில் ராஜா மான்சிங் நிற்கிருர். சிம்மாசனத்திற்கு முன்னுல் அக்பர் பாதுஷா கைகளேப் பின்னுல் கட்டிக் கொண்டு முன்னும் பின்னும் நடந்து அடிக்கடி நின்று பேசுகிருர். அவருக்கு முன்னுல் எதிர் எதிராக இரண்டு வட்டப் பலகைகள் போட்டு அதன் மீது சலீமும், அனர்கலியும் நிற்கிருர்கள். அவர்கள் கைகளில் விலங்கு]

அக்: *சலீம்! நீதியின் முன்னுல் நீங்கள் இருவரும் குற்றவாளிகளாக நிறுத்தப்பட்டிருக்கிறீர்கள். நீ செய்த குற்றம் மிகப்பெரியது.*

சலீம்: *(கை விலங்கை உயர்த்திக் காட்டி) இந்த விலங்கிலிருந்தே தெரிகிறது!*

அக்; *டில்லி மகுடத்தின் வாரிசு நீ!*

சலீம்; *பிறந்த அன்றே எழுதப்பட்ட உரிமைச் சாஸனம் அது;*

அக்: *எதிர்காலத்தில் இவ்வளவு பெரிய சாம்ராஜ்யத்தையும் கட்டி ஆள வேண்டியவன் நீ!*

சலீம்: *ஏன் நாட்டில் வேறு ஆட்களா இல்லே?*

அக்: *ஒரு நாடோடிப் பெண்ணேக் காதலித்தாய்!*

சலீம்: *நல்ல காரியந்தானே! பாராட்டுங்கள் சலீமை!*

அக்: *சாம்ராஜ்ய மக்களுக்குத் துரோக மிழைத்தாய்!*

சலீம்: *எப்படியோ?*

அக்: நீ செய்தது குற்றந்தானே?

சலீம்: குற்றம் என்று நீங்கள் சொன்னால் குற்றமே. இல்லை என்றால் இல்லையே.

அக்: இதற்குத் தண்டனை என்ன தெரியுமா?

சலீம்: சட்டம் உங்கள் கையிலே இருக்கிறது. நீதியை மீறி தண்டிக்க உங்களுக்கு அதிகாரமிருக்கிறது. தண்டனையை நான் எப்படிக் கணிக்க முடியும்?

ராஜா: தண்டனையிலிருந்து நீ தப்பலாம்; காதலை விட்டு விடுவதாக உறுதி சொல்.

சலீம்: நன்று அமைச்சரே நன்று. நான் தப்பலாம், அனாருக்கு நீங்கள் தண்டனை அளிக்கலாம். பரிதாபப்படுகிறேன் உமக்காக. என் உயிர் என்ன பொன்னால் செய்தது, அவள் உயிர் என்ன புழுதியில் கிடந்தது! இவ்வளவுதானா ஒரு அமைச்சருக்குத் தெரிந்தது. அக்பர் பாதுஷாவின் ஆட்சியிலே எல்லா உயிர்களும் சமம் என்று முரசறைகிறோமே, இப்போது மட்டும் ஏன் மறந்தீர்கள் அந்த நீதியை? சொந்தம் என்றவுடனே துடிக்கிறதே உங்கள் நெஞ்சு! என்னைப் பெற்றெடுத்த தாய் மனது பேதலித்து விடுமென்று நினைக்கிறீர்களே! அனார்கலி என்ன தாயில்லாமல் பிறந்த அவதாரமா? அன்னையின் இதயம் கண்ணாடி வீடு. அன்பெனும் தேன் சிந்தும் மென்மலர்க்காடு! அது எனக்கும் ஒன்றுதான், அனாருக்கும் ஒன்றுதான். சொல்லுங்கள் இப்போது! சாவதெனில் இருவருமே சாக வேண்டும்! இல்லையெனில் இருவருமே வாழ வேண்டும்! காதலை விட இனிப்பானதல்ல எங்களுக்கு உயிர்!

அக்: சலீம்!

ராஜா: பட்டத்திற்குரிய இளவரசன் நீ! அந்தஸ்தில்லாத காதலுக்காக நீ தண்டிக்கப்படுவதை நான் விரும்பவில்லை.

சலீம்: வெட்கக் கேடு! அந்தஸ்திற்கும் காதலுக்கும் முடி போடுகிறீர்களா? அமைச்சரே! காதல் வரம்புகளைக் கடந்த உணர்ச்சி! உங்களுக்கு வயதாகிவிட்டது மறந்து போயிருக்கும்! இன்னாரைத்தான் காதலிக்க வேண்டும், இப்படித்தான் வாழவேண்டும், முடிதாங்கும் சுமை தாங்கியாய் இருப்பதுதான் ராஜலட்சணம் என்றால் அந்த எல்லைகளை உடைத்து நொருக்கவே நான் விரும்புவேன்! நான் கேட்கிறேன்! வாழ்வதற்காக என்னை வளர்த்தீர்களா? முடிதாங்குவதற்காக என் சிரசை வளர்த்தீர்களா? எனக்கு உங்கள் அதிகாரம் வேண்டாம்! அந்தஸ்து வேண்டாம்! பொன் குவித்திருக்கும் பொக்கிஷம் வேண்டாம்! ஆலவட்டம் வீச ஆரணங்குகள் வேண்டாம்! அதிசய ரகத்திலே அந்தப்புற பொம்மைகள் வேண்டாம்! நீங்கள் பெருமை என்று நினைப்பவை அனைத்தும் எனக்கு வேண்டாம். எனக்குக் காதல் வேண்டும். அது நிலைத்தால்தான், எனக்கு உயிர் வேண்டும்!

அக்: பேச்சில் பயனில்லை! அக்பர் இதை சகிக்க முடியாது! உங்கள் இருவருக்கும் மரண தண்டனை விதிக்கிறேன். (கை தட்டி) கொண்டு போங்கள்.

[என்று அக்பர் போக ராஜா மான்சிங் 'பாதுஷா' என்று பின்னால் போகிறார். அனாரும் சலீமும் ஒருவரை ஒருவர் பார்த்து ஆனந்தக் கண்ணீர் சொரிய இருவரையும் இருபுறமும் சிப்பாய்கள் பிடித்து இழுக்க ஒருவரைப் பார்த்து ஒருவர்.]

அனா: ராஜா!

சலீம்: அனார்!

[என்று கத்திக் கொண்டே இருவரும் வேறு வேறு பக்கம் கொண்டு செல்லப்படல்]

காட்சி: 4. A.

(பின்னணியிலிருந்து குரல்.)

அனார்கலியைக் கைது செய்யச் சொன்ன அக்பர் பாதுஷா இருவருக்குமே மரண தண்டனை வித்திதார். ராஜபரம்பரை அஸ்தமித்து விடக் கூடாதே என்று எண்ணிய ராஜா மான்சிங் அக்பரோடு வாதாடி சலீமை விடுவித்தார். அனார்கலியை உயிரோடு சமாதி வைக்க வேண்டுமென்று ஆக்ஞை பிறந்தது. சலீம் அங்கு வருவதற்குள் சமாதியும் முடிந்து விட்டது.

காட்சி: 5,

சமாதி.

[சிறிய வீடு போன்ற சமாதி 'அனார் அனார்' என்னும் குரல் தூரத்தே தோன்றி, நெருங்கி வருதல் கேட்கிறது. சலீம் ஓடி வந்து, சமாதியில் மோதிக்கொண்டு]

சலீம்: அனார்! அனார்! ஏமாற்றி விட்டார்களே அனார்! எங்கே போனாய்! (அழுது) அனார்! எழுந்து வா. வரமாட்டாயா? வர முடியாதா? வழி அடைபட்டு விட்டதா? சண்டாளர்கள் உன்னைக் கொன்று விட்டார்களா? கண்ணுக்கு அணிகலமே! கட்ட விழா மென் மலரே! சாவை அறிந்தறிந்து சாக்காட்டில் மறைந்தாயோ? மண்ணிலே உன் பெருமை மதிப்பவர்கள் இல்லையென்று, தொட முடியா உலகிற்குத் தொடர்ந்தோடிப் போனாயோ? பெண்ணிற் பெரும் பொருளே! பேரழகின் பிறப்பிடமே! சாத்துபடி கலைக்காத சிலை போலிருந்தாயே! உன் சடலத்தைக்கூட நான் காணமுடியாதா! அழகே! உயிரே! எங்கே போனாய்!

அள்ளிச் சொருகி அழகுபட நடந்து வந்தால், கொள்ளை வனப்பில் உன் கூடவரும் கூந்தலெங்கே! களங்கமிலா வானத்தில் வளர்ந்துவரும் பிறை போலக் கண்ணாடி நெற்றி எங்கே! ஆடாமல் அசையாமல் அப்படியே நின்றாலும் கோடி உலகத்தைக் கூட்டிவரும் விழி எங்கே! மூடித்திறந்தால் என் உயிரெடுத்து மூடிவிடும் சின்ன இமை எங்கே! செம்மாங்கனி வடித்த சிங்கார இதழெங்கே! கண்ணாடிக் கன்னமெங்கே! கற்கண்டுச் சொல்லெங்கே! முல்லைப்படை எங்கே! முத்துச் சிரிப்பெங்கே! இட்டடி நோக எடுத்தடி கொப்பளிக்குமே, எங்கே அந்தப் பாதங்கள்! செங்கல் விழுந்ததா? வலித்திருக்குமே; துடித்திருப்பாயே! அனார்! துடித்திருப்பாயே! அனார்! உன் காந்தள் மலர்க்கை அசைவை நான் காணமுடியாதா! கருநீல விழிகள் இனி காணக்கிடைக்காதா! பூந்தாது வாரிவிடும் பொன் மலரே! காட்டு விலங்குகளின் ராட்சசப்பார்வை காதலுக்கு சமாதி வைத்து விட்டதே!

[ஆத்திரமாக] அக்பர் பாதுஷா! பட்டத்துக்கோர் இளவரசன் தானே வேண்டும் உங்களுக்கு! கொண்டு வாருங்கள் ரத்ன கிரீடத்தை! செத்தவன் தலையிலே சிங்காரித்து மகிழுங்கள்!

[திரும்பி] அனார்! நானும் வருகிறேன்! நீயின்றி நான் இல்லை; நினைப்பின்றி நெஞ்சில்லை! வருகிறேன் அனார், வருகிறேன்!

[என முட்டி மோதிச் சாய்தல்]

முற்றும்.

[9–ம் பக்கத் தொடர்ச்சி]

டது. அதற்காக முதலைக் கண்ணீர் வடிப்பானேன், என்று ஆறுதல் சொன்னேன். அவருக்கு ஆத்திரம் குறையவில்லை. வார்த்தைகள் இருக்கிறதென்பதால் வக்கணை வக்கணையாக அர்ச்சனை புரிந்தார். 'ஜெகம் புகழும் சித்திரக்காரரே சேதி முழுவதும் எனக்குத் தெரியும். ஆதோ பாரும் உமக்குப் பின்னால் நாலு பேர் படக்கடைக்காரர்கள்.

உமக்கு அச்சாரம் கொடுத்தவர். அந்த தழுவலுக்காக சுளை சுளையாக ஆயிரக் கணக்கில் வாங்கினீரே. அதற்கு பின்னும் அந்தத் தழுவலுக்குச் சொந்தம் கொண்டாட ஏதய்யா உரிமை என்று எதிர்த்துக் கேட்டேன். எதுவும் பதில் பேச முடியவில்லை அவரால். இரண்டாவது நபரைப் பாரும் அவரும் உமக்கு அந்த தழுவலுக்காக அள்ளிக்கொடுத்தவர்தான். அதை உன்னால், இல்லை யென்று சொல்ல முடியுமா? அந்த வெள்ளைக் காசுகளுக்கு, வாயிருந்தால் விலா நோகச் சிரிக்கும்; வீராதி வீரனே என்னை வாங்கிக்கொண்டு அந்தத் தழுவலை வெள்ளாட்டியாக்கிய பின் வீராப்பு ஏன் என்று கேட்கும், அந்த உண்மையை நீர் மறந்தால் உலகம் மறந்திடுமா! அந்நிலையில் உன் உறுமலுக்கு அர்த்தம் ஏது என்றேன். மேலும் அடுத்தவரைக் காட்டினேன் இந்த நபரிடம் தானே விலை பேசினாய் மூன்றாவதாக. பேச்சு முடிவதற்குள் நாலாவது கிளையில் தொத்திவிட்டாய். சித்திரத்திற்கு உடைமாற்றி விட்டால் உருமாறி விடுமா? இந்நிலையில் இரண்டாவது நீ விலை வாங்கிய இடத்தில் சித்திரத்திற்கு உரிமை கொண்டாடுகிறார்கள். காட்சிக்கு வைக்க விரும்புகின்றனர். அது எந்த வகையில் தவறு? ஏன் சீறுகிறாய்?

அவசியத்திற்கு செய்யவேண்டிய அமைப்புகளை அவர்களிடமுள்ள சித்திரக்காரனைக் கொண்டு சீர்திருத்துகின்றனர். அந்த வேலையையும் நீயே செய்து கொடுக்க ஒப்பியிருந்தால் உன் தழுவல் அந்த சித்திரக்காரனை தழுவியிருக்காது. கடமையைச் செய்பவனைக் காய்கிறாய். கண்ணியத்திற்கு பேர் போன இடத்திலே இருந்துகொண்டு நீ பயின்ற குரு குலத்தில் கற்றுத் தேறியவன்தான் அவனும்! உன் கையிலே மட்டும்தான் தீட்டுகோலிருக்கிறது. அவன்கையிலே இருப்பது கன்னக்கோல் அல்ல. உன்னையே நீ எண்ணிப்பார். நீ உருவாக்கியதாக நினைக்கும் ஓவியங்களைச் சற்று உற்றுப்பார். அவைகளுக்கு பின்னால் எத்தனை கரங்கள் தீட்டுகோல் பிடித்திருக்கிறதென்பது தெரியும்.

வசைபாட வார்த்தை இருக்கிறது என்று அள்ளி வீசாதே பாரதப் போரில் தன் தம்பியர்க்குத் துணை வராது "செஞ்சோற்றுக் கடன் கழித்த கர்ணன்" கதை தெரிந்திருக்கும் உனக்கு. அந்நிலையிலுள்ள உன் இனத்தை பார்த்து உருமுகிறாய்; உலகம் சிரிக்கிறது உன் செயல் கண்டு. ஊருக்குச் சொன்னாய் "வாழு வாழ விடு" என்று. இப்பொழுது நீயேன் நந்திபோல் வழிமறிக்க முந்துகிறாய். வசைக்கு வசை பாட வார்த்தை கிடைக்காததால் அல்ல இவ்வளவும் சொல்வது ஒரே கூடாரத்தில் சந்திக்கவேண்டிய திருமுகங்கள் ஒரே அணியில் படைக்கலமேந்தி படை நடத்திச் செல்லவேண்டிய தோள்கள் என்பதை நீ மறந்து ஆடினதால் நினைவு படுத்தினேம். முன்னால் பல பேருடைய சோகத்தில் உன் சுகம் வளர்ந்திருந்தாலும் இனியும் அந்தப் பாதை நடக்காதே; இழி சொற்களை அள்ளி வீசாதே; நீ பகைப்பது உன் மாற்றானை அல்ல. உன் மருங்கே வளர்பவன் இமயத்தை ரோமத்தால் கட்டியிழுப்பவன், வந்தால் மலை; அறுந்தால் ரோமம் என்ற கொள்கை கொண்டவன், உன்னவன் ஊருக்கு ஏச்சாக இனியும் உளராதே. சுகம் எங்கே இருக்கிறது என்பதை இப்போதாவது புரிந்துகொள். ஜெகம் புகழும் சித்திரக்காரனே நீ வாழ்க! இமயத்தின் உச்சியில் இருக்கிறாய்! கொஞ்சம் பார்த்து அடிசறுக்காமல் நடந்துகொள். ஆல்ப்ஸ் மலையிலும் நீ வெற்றிக்கொடி பறக்க விடு. பார்த்து மகிழ்கிறோம். பூரிக்கிறோம் என்று தெளிவுபட பேசித்த உருவகத்தை உங்கள் முன் படைத்துவிட்டேன்.

வி. கங்காதரன்—புளியங்தோப்பு.

'சொர்க்கவாசல்' படத்தைப் பார்த்தாவது, நாட்டிலுள்ள நரகங்களை ஒழிக்க மடாதிபதிகள் முன் வருவார்களா?

மடாதிபதிகளா! அவர்களே நரகங்களாயிற்றே! அவர்களையும் சேர்த்து ஒழிக்க வன்றோ 'சீர்திருத்தம்' விரும்புகிறது!

* * *

ஏ. பாளையம், சென்னை.

குடியாத்தம் தேர்தலில் நிற்கும் காமராசரை, ஏன் திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கக் கூடாது?

உஸ்! சத்தம் போட்டுப் பேசாதீர்! ம. பொ. சி, கவலையால் செத்துப் போவார்!

* * *

பெ. செங்குட்டுவன்—சைதை.

கூட்டத்திற்கு குறிப்பிட்ட காலத்தில் வருவது முறையா, அல்லது காலம் கடந்து வருவது முறையா?

குறிப்பிட்ட காலத்தில் வருவது தான் முறை. ஆனல் ஒரு மனேபாவம் தான் உயிரை வாங்குகிறது. பொது மக்கள் நினைக்கிருர்கள், "தலைவர் தாமதமாகத்தான் வருவார்; அதனல் தாமதமாகப் போவோம்" என்று. தலைவர் நினைக்கிருர், "பொது மக்கள் தாமதமாகத்தான் கூடுவர்; அதனல் தாமதமாகப் போகலாம்" என்று!

* * *

பி. தாமோதரம்—சென்னை.

பெரியாரின் தலைமையின் கீழிருந்து பிரிந்து, தனிக் கொடி, தனிக் கழகம் அமைத்த அண்ணுத்துரை, பொதுத் தேர்தலில் இறங்க ஏன் பெரியாரின் உத்தரவை எதிர்பார்க்கிருர்?

கொடியும் கழகமும் வேருனலும் கொள்கை அணுவும் மாறவில்லை என்பதை பெரியார் நினைவு படுத்திக் கொள்வதற்காக?

* * *

பி. எம். சொக்கலிங்கம்—சென்னை.

காஞ்சீபுரப்பாதைக்கும் ஈரோட்டுப் பாதைக்கும் ஏதாவது வித்தியாசம் உண்டா?

உண்டு—அந்த வித்தியாசம், ஒவ்வொரு பாதையிலும் நடக்கிறவர்களின் கால் பலத்தையும் மன வளத்தையும் பொறுத்தது!

* * *

ஏ. டி பாட்சா—சென்னை.

தென்றலில் சினிமாவுக்கு ஒரு பகுதி ஒதுக்கினல் நன்ருயிருக்கும்; செய்வீரா?

அவசியந்தானு?

* * *

மு. அ. ராஜு—ஈரோடு.

நம் கழகம் பொதுத் தேர்தலில் நிற்குமா?

பொதுக் குழு முடிவு செய்யும்.

மு. பாண்டியன்—சென்னை.

நான் ஒரு சிறந்த பேச்சாளனுகவும் எழுத்தாளனுகவும் ஆக என்ன செய்ய வேண்டும்?

பேச்சாளனுக ஆவதற்கு அன்றுவின் புத்தகத்தை எடுத்து, அதை பேசுவதுபோல் உரக்கப் படித்துப் பார்க்க வேண்டும். எழுத்தாளனுக ஆவதற்கு: எந்தப் புத்தகத்தையும் நீங்கள் எழுதியதாக நினைத்துப் படித்துப் பார்க்க வேண்டும். இது ஒரு துணை யோசனைதான். உண்மையில் இது மட்டும் பயன் தராது. அந்த மனேபாவம் இயற்கையாகவே இருக்க வேண்டும்.

* * *

'இல்லற ஜோதி' படத்தில் வரும், 'அனர்கலி' நாடகம் கலைஞர் கருணநிதி எழுதியதாக என் நண்பர் கூறுகிருர்...

ஆமாம்; முழுக்க முழுக்க உண்மை. கண்ணதாசன் கல்லக்குடி வழக்கில் தீர்ப்பாகி சிறைக்குச் செல்லும் போது ஒரு நாடகத்தை எழுதிக் கொடுத்து அதை வைத்து மாற்றிக் கொடுக்கும்படி நண்பர் கருணவிடம் கேட்டுக் கொண்டார். அதன்படி இரண்டொரு வரிகளை (பெண்ணிற் பெரும் பொருளே! பேரழகின் பிறப்பிடமே!) எடுத்துக் கொண்டு அந்த சாரத்தை வைத்து பாக்கியை அவரே எழுதிக் கொடுத்தார். ஏன், படத்தைப்பார்க்கும்போதே, கதையில்வரும் இலக்கியவசனத்திற்கும் நாடகவசனத்திற்கும் பேதம் புரியுமே உமக்கு! (இதே கேள்வியை கேட்ட எல்லோருக்கும் இதே பதில்.)

* * *

மா. செ. பழனிச்சாமி-சுந்தராபுரம்.

தமிழில் ஒரு பெண்ணைக் குறிப்பிடும் போது, ஒருவள் என்று குறிப்பிடுவது சரியா, ஒருத்தி என்பது சரியா?

ஒருத்தி தான் வழக்கிலே உளது; ஒருவள், ஒருவன் அடிப்படையில் பெண்பாலாக்கப்பட்ட புதிய உற்பத்தி. ஆனலும் பொருள் தவறல்ல.

* * *

என். இராமனுதன்—மதுரை.

காசுக்கும் கர்வத்துக்கும் என்ன தொடர்பு?

காசுவரும் வாசல் வழியாக, அதன் பின்னலேயே கர்வமும் வருகிறது. கர்வத்தை வீட்டில் உட்கார வைத்து விட்டு காசு போய் விடுகிறது!

தன்னைவிட சிறந்தவன் இல்லை என்று நினைப்பவன் நிலை என்ன ஆகும்?

இருக்கிருன் என்று அனுபவபூர்வமாக அறிந்துகொள்ள நேரிடும்!

* * *

அருளப்பன்—மதுரை.

ஓய் தென்றலாரே! உமக்கு மூளை இருக்கிறதா?

இல்லாமல் முடியுமா? உமக்கெல்லாம் கொடுத்தாக வேண்டுமே!

—கலிங்கம்

நூல் நயம்

பொதுவாழ்விற் பணியாற்றி, இலக்கியத்துப்
பொன்வீட்டில் இளைப்பாறப் புகுந்தகாலை
மதுக்கோப்பை கரத்தேந்திக் குடியன்காணும்
மாருத கனவுலகம் காட்சியாகும்!
சதுராடும் மங்கையரின் பாதத்தோடு
சரியாகச் சேர்ந்தாடும் சிலம்பின் ஓசை
கதகதப்பை வாலிபரின் உளத்திலேற்றிக்
கலக்குதல்போல் இலக்கியமும் கலக்கும் நெஞ்சை!

—கண்ணதாசன்

மனித சமுதாயத்திற்கு புதிய புதிய கவிதைகளைப் படைத்துத் தந்தார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அவர்காட்டியபாதையில், பல இளங்கவிஞர்கள், நடந்தார்கள், சிலர் தொடர்ந்து நடந்தார்கள், சிலர் இடையிலே தளர்ந்தார்கள்; தொடர்ந்து நடந்தோரில் வெற்றிகரமாக முன்னேறியவர் தோழர் வாணிதாசன். அவரது கவிதைகளைப் படிக்கும் போது, சில சமயங்களில் பாரதிதாசனுக்கும் முன்னலே போகிருர் என்ற எண்ணந் தட்டும். சாதாரணமாக கவிதை எழுதுகிறவர்களிடம்– சிலரிடம்–சொல் வளம் நன்ருக இருக்கும்; கற்பனைச் சிறப்பு குன்றிக் காணப்படும்; சிலரிடம், கற்பனை ஊற்ருகப் பெருகும்: ஆனல் சொல் வளமின்றி, "கூறியது கூறல்" என்னும் குற்றத்திற்கு இலக்காகும். இரண்டும் வளமாகப் பெற்ற கவிஞர், தோழர் வாணிதாசன். "கவிஞர்கள் பிறக்கிருர்கள்; செய்யப்படுவதில்லை" என்பது இவர் வரையில் உண்மை! சமீபத்தில் நமது பார்வைக்கு வந்திருக்கும், இவரது 'எழிலோவியம்' முறையில் புரட்சிக் கவிஞரின் 'அழகின் சிரிப்பு' போன்றது. ஆனல் சுவையில், அதே அளவில் வேறு வகையான சுவையைத் தருகிறது. நல்ல நூல்; ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தால், பரிசு பெறக்கூடிய தகுதிவாய்ந்தது. உபயோகமற்ற நூல்கள் குவிகிற இந்நாளிலே, இந்தச் சுவை நூல் வெளியானது, திராவிட நாட்டிற்கே ஒரு பெருமை. இது கிடைக்கும் இடம்: மலர் நிலையம். 133, பிராட்வே சென்னை–1. [விலை அணு 12.]

நெருப்புக்கு சூடு இயற்கை. ஆனல் இதோ சுடாத நெருப்புத் தருகிருர், 'ரவி' என்ற புனைபெயரில், தோழர் கு. திரவியம்! ஏறக்குறைய அறுபது கவிதைகளைத் தொகுத்து தென் திசைக்குப் படைத்துள்ளார், தோழர். பல கவிதைகள் இதில் மிகவும் சுவையாக அமைந்துள்ளன. இவர் கைக்கொண்டுள்ள சந்தங்கள் மிக எளிமையானவை, பாரதியின் பாதை இது. 'கற்பனை முத்தாரம்' என்று இதைக் கூறலாம். ஆனல் ஒரு குறை; சில கவிதைகளில் இலக்கணந் தப்புகிறது. பெரும் பகுதிக் கவிதைகளில் இலக்கணம் கச்சிதமாக அமைந்துள்ளது—ஆனல், ஓரிரு கவிதைகளின் சந்தம் என்ன என்று புரியவில்லை. எந்த சந்தத்தில் மாற்றிப் படித்தாலும் இலக்கணக் குறை தெரிகிறது. உதாரணம்: வெள்ளி*யின் துடிப்பு. மற்றப்படி, இது ஒரு சுவையான கவிதைத் தொகுப்பு, இது கிடைக்கும் இடம்:* தமிழ் பொழில், 31 சிம்மக்கல் தெரு, மதுரை. [விலை ரு. 1—4—0.]

இலவு காத்த கிளி *என்னும் சிறு கதைத் தொகுப்பு, தோழர் பிரம்மம் எழுதியது. நல்ல நல்ல கதைகள், பொழுதுபோக்க அருமையான புத்தகம். கிடைக்கும் இடம்:* மனேகர் பிரசுரம். 43, லிங்கிசெட்டி தெரு, சென்னை–1. [விலை ரு. 1—8—0, 150 பக்கங்கள்.]

ஆயிரத்தொரு இரவுகள் *பற்றி நண்பர்களுக்கு அறிமுகப் படுத்த வேண்டியதில்லை. உலகெங்கும் பரவிய கதைகள் அவை. அவற்றை மொழிபெயர்க்க எடுத்துக் கொள்ள வேண்டிய சிரமம், நாள் முழுதும் விறகு வெட்டும் விறகு வெட்டியின் சிரமத்தைக் காட்டிலும் அதிகம். அந்த வேலையை மிகவும் சுலபமாகவும் அழகாகவும் செய்திருக்கிருர்,* அ. லெ. நடராசன். *'கூலியாள் கதை' என்னும் பகுதியிலே, புத்தகத்தின் 161–வது பக்கத்திலே, கூலியாள் பாடும் பாட்டை மொழிபெயர்த்துத் தரும்போது,* "எதிர்க்கும் ஆற்றல் படைத்தவர்களை மன்னிப்பது சிறந்த செயல்; ஆனல் உதவியற்றவர்களை மன்னிப்பதோ அதினிலும் சிறந்த செயல் ஆகும்" *என்று வரைந்திருக்கிருர். மொழிபெயர்ப்பின் எளிமையைக் கூறவே இதை எடுத்துரைத்தேன். அருமையான இந்த நூல்—முதற் பாகம்—கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாகும். இது கிடைக்கும் இடம்:* பாரதி பதிப்பகம், சென்னை–17. [விலை. மலிவு, 4—8—0, பரிசு 6–0–0.]

இப்போது அனர்கலி*பற்றி ஏராளமான புத்தங்கள் வெளி வருகின்றன. ஆனல் மூன்று ஆண்டுகளுக்கு முன்னலேயே வெளிவந்த நூல், தோழர்.* காழி விசாகன் *எழுதிய* இன்பநாதம். *உண்மையிலேயே இது இன்ப நாதமாக இருக்கிறது! ஆனல் அச்சிட்ட முறை நன்ருயில்லை. ஒரு நாடகத்தை அச்சிடும் முறையில் அமையவில்லை. கிடைக்கும் இடம்:* தனுர்வேல் பப்ளிகேஷன்ஸ், 17. தெற்கு வீதி, திருவிடை மருதூர். [விலை ரு. 1-8-0]

*

உதவி ஆசிரியர்

கண்ணதாசன்

பேரிப்போன ஒரு கதர் ...ப்பா; அதைப் பிரதிபலிக்க ஒரு கதர் வேட்டி; அதன் நடுவே தையற்காரனின் கைவண்ணம். எண்ணெயுமில்லாமல், தண்ணீருமில்லாமல், 'பொல பொல' வென்று சீவி விடப்பட்டிருக்கும் தலைமயிர், குழிவிழுந்த கண்கள்; வற்றிய கன்னங்கள்; அதிலே சல்லடையின் பின்பக்கத்தைப் போலக் குமிழிட்டு நிற்கும் பருக்கள். ஜிப்பாவையும் மீறித் தெரியும் என்பு தோல் போர்த்த உடம்பு; பலவிதமான தோல்களால் ஆன செருப்பு.

அவன் எழுத்தாளன்.......!

பத்திரிகாலயத்தில் உதவி ஆசிரியர்.

வீதியின் ஓரத்திலே நடந்து வருகிறான்.

கையிலே சில புத்தகங்கள்....

அவன் வேகமாக நடக்கிறான்.

அதிலே அடிமைத்தனம்இல்லை, ரணகளத்திலே வீறுகொண்ட—ஆனால் ரத்தப் பசையே இல்லாத குதிரையின் நடைபோலக் காணப்பட்டது.

அவன் நடந்து கொண்டிருக்கிறான்; ஆனால்.......

நினைவு எங்கேயோ சென்று கொண்டிருந்தது! அவன் என்ன நினைக்கிறான்? அதுதான் அவனுக்கும் தெரியாது!

கற்பனையோ?

இருக்கலாம்; அடிக்கடி குனிந்து நிமிரும் தலை அதைத் தான் காட்டுகிறது.

அல்லது, கவலையாக இருக்கலாமோ?

அப்படியும் இருக்கலாம், அவனது தன் நினைவற்ற போக்கிலிருந்து அப்படியும் நினைக்கலாம்.

யூகம்தான் செய்ய முடியும்; மனோதத்துவ நிபுணனால் கூட அவனது மனத்தை அறிந்து கொள்ள முடியாது!

வாசலிலே 'தமிழ் வீரன்' என்று பலகை மாட்டியிருந்த கட்டிடத்துக்குள் நுழைந்தான் அவன்.

* * *

காரியாலயத்திலே.......

ஒரு 'கத்தை' 'புரூப்' காத்துக்கிடந்தது மேஜைமேல்!

'மிஸ்டர் காஞ்சி நாதன்' அதைக் கொஞ்சம் சீக்கிரம் பார்த்துக் கொடுத்திருங்கோ, நேரமாச்சு 'பாரம்' காத்துகிட்டுக் கெடக்கு!

இது ஆசிரியரின் உத்தரவு!

அவனை எதற்காக உதவி ஆசிரியராகச் சேர்த்தார்கள்? 'மொழி பெயர்க்க', 'புரூப்' படிக்கத்தான்! அதுதான் அவன் 'விதி'! அவனென்ன, தினசரிப் பத்திரிகை உதவி ஆசிரியர்களின் பொது விதி அது!

அவனுக்குச் சொந்தக் கற்பனையில்லையா? "யார் சொன்னது? அவனது வாழ்க்கை அனுபவமே ஒரு அழகான கற்பனையாக உருவாகிவிடுமே அவன் நினைத்தால்"

பூண் பிடித்த ஓட்டைப் பேனாவைத் திறந்து, இடது கையில் தலையைத் தாங்கிய வண்ணம் திருத்த ஆரம்பித்தான்.

"காந்தியின் நிர்வாணத்திட் நிறைவேற்றத் தொண்டைகள் தேவை...." என்றிருந்தது முதல் பாரா.

அவனுக்கு தலைவலி எடுக்க ஆரம்பித்தது! உடலெங்கும் அருவருப்பும் கவலையும் ஊடாடுவது போன்ற ஒரு உணர்ச்சி ஏற்பட்டது.

கொஞ்ச நேரம் பேனாவை உபயோகிக்காமல் வைத்துக்கொண்டிருந்தான். முதல் பாராவைத் திரும்பப் படித்தான்.

சிரித்தான்....வரண்ட சிரிப்பு.

"நிர்வாணத் திட்டத்திற்குத் தொண்டைகள் தேவையா! இந்தக் கம்பாஸிட்டர்களுக்கு மூளையே இல்லை. இந்த மாதிரி கம்பாஸிட்டர்களும், அச்சாபீஸ்களும், பத்திரிகாலயங்களும் இருக்கிறவரை காந்தியின் திட்டம் நிர்வாணத் திட்டமாகத்தான் போகும்!"

அவன் 'புரூப்' படித்தான்.

இடையிடையே, 'கொல்லு', 'சபாஷ்' போன்ற வார்த்தைகளைச் சொன்னான், வெளிப்படையாக. அவன் ஒரு அபேதவாதி, அவன்பட்ட கஷ்டங்கள், அவனைச் சித்திரவதை செய்த சமுதாயம், அவனை, அவன் தோழர்களைப் பட்டினிபோட்ட முதலாளித்வம்; அவனை அபேதவாதியாக்கியிருந்தன.

காலம், சமுதாயத்தைச் செய்த அனுகூலம், எழுத்தாளர்களை—ஆசிரியர்களைப் பட்டினி போட்டுப் போட்டு அபேதவாதிகளாக்கியதுதான், அவர்கள் அபேதவாதிகளானதனால்தான் சமுதாயத்தில் இன்று விழிப்பேற்பட்டிருக்கிறது. இனி மாற்றம் ஏற்படப் போகிறது, காலம் அதன் கடமையைச் செய்துவிட்டது.

[தானும் ஒரு எழுத்தாளனாக வேண்டும் என்று யாராவது நினைத்துவிட்டால், அன்றே அவர்களைப் பற்றிக்கொள்கிறது வறுமை. எழுதுவான், போற்றுவார்கள் மக்கள். மகிழ்ந்திருப்பான் சிறிது நேரம், மக்கள் போற்றுதலினால் ஏற்பட்ட பூரிப்பால், பார்ப்பான் பையை; பணமிருக்காது பையில்; அப்பொழுதுதான், தான், தன் குடும்பம் என்ற கவலை ஏற்படும். இப்படியே நாளெல்லாம் வாடி வதங்க வேண்டியவன்தானா எழுத்தாளன்?]

மெல்லக் கூறிவிட்டுத் திருத்தினான்.

கொஞ்சம் காப்பி சாப்பிடலாம் என்று நினைத்தான். பையில் கையைவிட்டுப் பார்த்தான், ஒன்றே காலணாத்தான் இருந்தது. அதிலும் காலணாத் 'தேசல்.'

"மிஸ்டர்" ராமசாமி! அரையணா இருக்கா?

"இல்லையே சார்" இப்போது தான் சிகரெட் வாங்கக் கொடுத்தனுப்பிச்சேன்? கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே கேட்டிருக்கப் படாதா?"

உபசார வார்த்தையாவது சொன்னாரே! அது போதுமா அவனுக்கு? அவன் இப்பொழுது காப்பி சாப்பிடவேண்டும். அரையணா வேண்டும் அவனுக்கு; யார் கொடுப்பார்கள்?

ஒருமுறை உதவி ஆசிரியர்களைச் சுற்றிப் பார்த்தான். எல்லோரும் 'வரச்சை'களாகத் தோன்றினார்கள். கடைசியில் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனைப் போல், டே, அம்பி என்று கூப்பிட்டான்.

பையன் வந்தான்.

"தர்பார் ஹோட்டல்லே ஒரு 'சாய்' வாங்கிகிட்டுவா," என்று ஒரு அணாவைக் கொடுத்தனுப்பினான்.

அவன் சொன்னான் மனதுக்குள்: "ஒரு அணாவிற்குச் 'சாய்' விற்கும் முஸ்லிம்கள் வாழ்க!"

"சார் இதையும் கொஞ்சம் படித்துக் கொடுத்துடுங்கோ!" ஒரு கம்பாஸிட்டர் பல்லவி.

மீண்டும் ஒரு கத்தைக் காகிதம் மேஜையிலே துவண்டது.

படித்துத் திருத்த முனைந்தான்.

முதலாளித்வத்தைப் பற்றி, ஜெயப்பிரகாஷ் நாராயணன் பேசியபேச்சு அது. முதலாளித்வத்தை ஒழிப்பதுபற்றி அழகாக ஆணித்தரமாகப் பேசியிருந்தார் சோஷலிஸ்ட் 'தோழர்.'

'புரூப்' படித்து முடிந்தான்!'

'சாய்' வந்தது; குடித்தான். மேலும் 'புரூப்'........

ஒரு ஆங்கிலச் செய்திக் குறிப்பு வந்தது. மொழிபெயர்த்தான், வேலை முடிந்தது.

காரியாலயத்தை விட்டு வெளியேற இன்னும் அரைமணி நேரம் இருந்தது. அவனது அன்றைய அடிமைத்தனம் நீங்க இன்னும் அரைமணி நேரம் இருந்தது. யந்திரம் ஓய்வு பெற இன்னும் அரை மணி நேரம்.

அவன் பேனாவை மூடிப் பையில் சொருகிக் கொண்டு, சோம்பல் முறித்தான். தீ வாய்ப்பட்ட பச்சை மூங்கில் வளைந்து கொடுத்துக் கருகுவதைப்போல. காஷியரிடம் கேட்டுக் கொஞ்சம் பணம் வாங்கலாம் என்ற நினைவோடு மெல்ல நாற்காலியை விட்டு எழுந்து 'காஷியர்' இருந்த அறைக்குள் நுழைந்தான்.

"என்ன மிஸ்டர்! என்ன விசேஷம்" அவருக்குள்ள அதிகாரத்தின் எல்லையில் நின்று பேசினார் 'காஷியர்.'

"ஒரு இருபது ரூபாய் வேணும் அட்வான்ஸா!"

"பணம் இல்லையே சார்! இன்னிக்கு 'பிரஸ்'ஸுக்குச் சம்பளம் போடணும். நாளை வேண்டுமானால் பார்க்கலாம். ரொம்ப மன்னிச்சுக்குங்கோ!"

"உ....ம்"

அவன் வெறுங் கையோடு அறையை விட்டு வெளியே வந்தான். மேஜையில் வைத்திருந்த புத்தகங்களை எடுத்துக்கொண்டு வெளியேறினான்.'

அந்தப் புத்தகங்களை அவன் எதற்காகக் கொண்டு வந்தான்? அதுவும் அவனுக்குத் தெரியாது! எழுத்தாளன் என்ற அடையாளத்துக்காக இருக்கலாம்!

அழமாட்டாக் குறையோடு,கவலையால் நெஞ்சு விம்ம நடந்தான்!

நடந்து கொண்டேயிருந்தான்.

கவலை புகைபோலச் சூழ்ந்தது தலை சுற்றியது; நடந்தான்.

வீட்டுக்கு வந்துவிட்டான்.

புத்தகத்தைத் தூக்கிப் போட்டுவிட்டுக் கட்டிலில் சாய்ந்தான். அவனையறியாமல் அவன் கண்களில் நீர் நிரம்பிற்று, வாய், "என்ன வாழ்க்கை வேண்டிக் கிடக்கிறது!" என்று முணுமுணுத்தது.

அவன் மனைவி ஏதோ சொல்ல வந்தவள், அவனது நிலையைப் பார்த்து வாயை மூடிக்கொண்டாள்.

அப்படியே கிடந்தான்.

அவள் சமையல் அறைக்குள் நுழைந்தாள்.

குழந்தை "அம்மா! பால்!" என்று கத்திற்று.

அந்தச் சத்தம் அவன் காதிலும் விழுந்தது. அவனை மீறிவிட்டது அழுகை.

விம்மி விம்மி அழுதான்.

அப்படியே உறங்கிவிட்டான்.

இரவு சாப்பிடவில்லை.

இரவு என்ன நடந்தது என்பது அவனுக்குத் தெரியாது.

அவனும் – அவன் மனைவியும் பட்டினி! விடிந்தது,

என்ன செய்வதென்றே அவனுக்குப் புரியவில்லை. இன்றைக்கு இருபது ரூபாய் கிடைக்கும் என்ற தெம்புமட்டும் ஓரளவு இருந்தது.

மனைவியிடம் சொல்லிச் சமாதானப்படுத்திவிட்டு அந்தப் பழைய உடுப்புகளை மாட்டியவண்ணம் நடந்தான். திரும்பவும்........

அவன் யந்திரமாகி விட்டான்.

பண்டமாற்று ராஜ்யம்!

'பணம்' என்ற தொல்லையில்லாமல் பண்டமாற்றின் மூலமே முன் காலத்தில் அரசாங்கங்கள் கூட நடந்துவந்திருக்கின்றன. இந்த அபூர்வம் நமது எல்லைப்புறத்திலுள்ள ஸ்வாட், தீர், சித்ரால் என்ற இஸ்லாமிய நாடுகளில் இன்றும் நிகழ்ந்து வருகிறதாம். சகல விளைவுகளிலும் பத்திலொரு பங்கை சர்க்கார் வாங்கிக்கொள்கிறார்கள். ஆனால், ஆடுகளுக்கு மட்டில் நாற்பதில் ஒரு குட்டி விகிதம் கடமை வாங்கப்படுகிறது. 'கண்டிராக்டர்கள்' இந்தக் கடமைகளை வசூலித்து சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளங்களைப் பண்டங்கள் ரூபத்திலேயே பட்டுவாடாவும் செய்கிறார்கள். சில ராணுவ உத்தியோகஸ்தர்களின் அரை வருஷச் சம்பளங்களைப் பாருங்கள்:

1. சிப்பாய்களுக்கு: 7 மணங்கு சோளமும், 4 மணங்கு கோதுமையும், 7 மணங்கு அரிசியும், துணிமணிகளுக்காக 40 ரூபாய் ரொக்கமும். 2. சுபேதார்களுக்கு: 25 மணங்கு தானியமும் 60 ரூபாய் ரொக்கமும். 3. தளகர்த்தர்களுக்கு: 40 மணங்கு தான்யமும் 80 ரூபாய் ரொக்கமும். 4. நாயிப் சர்தாருக்கு: 60 மணங்கு தானியமும் 100 ரூபாய் ரொக்கமும். (108 தோலாக்கள் கொண்ட சேர்கள் 40 கொண்டது ஒரு மணங்கு)

இதே மாதிரியே போலீஸ், நீதி இலாக்கா, நிர்வாக இலாக்கா முதலியவற்றிற்கும் சம்பளப் பட்டுவாடா நடக்கிறது.

மாஸ்கோவா? காஞ்சீபுரமா?

இந்தியாவில் கம்யூனிஸ்ட் உணர்ச்சி வித்தூன்றி ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்குமேல் ஆகிறது. ஆங்காங்கே சிதறிக் கிடந்த கம்யூனிஸ்ட் தோழர்களை ஒன்று திரட்டி உருவான இயக்கமாக்கி இன்றைக்கு இருபது ஆண்டுகள் கடந்து விட்டன. இந்தக்காலம் வரையில் கம்யூனிசத்தின் மலர்ச்சிக்காக செய்த காரியங்கள் என்ன? சாதித்த பணிகள் யாது? என்பதை பார்க்கும்போதுதான் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபது ஆண்டு உழைப்பு காட்டில் காய்ந்த நிலவாகவும் பாறைமீது தூவிய விதையாகவும் ஆனதே என்ற வருத்தம் மேலிடுகிறது. ஆனால் இதே நேரத்தில் தி. மு. கழகத்தின் சாதனைகளை ஒப்பிட்டு பார்க்கும்போது இரண்டு இயக்கங்களின் தாரதம்மியங்களும் சிறப்பியல்புகளும் நமக்கு தெளிவாக புலனாகும்.

இந்த நிலைக்கு உரிய காரணத்தை சுருங்கச் சொல்ல வேண்டுமானால் கம்யூனிஸ்ட்டுகளுக்கு இலட்சியத்தில் இருக்கும் உறுதி நடைமுறையில் இருப்பதில்லை; கட்சியின்மீது கொண்டுள்ள வெறி நாட்டு மக்களிடம் கொள்வதில்லை. நாட்டு நிலை, கால நிலை, சூழ் நிலை ஆகியவைகளுக்கு ஏற்ப தங்களை மாற்றி அமைத்துக்கொள்ளும் மனோபாவமோ அமைப்போ கம்யூனிஸ்டுகளுக்கு இல்லை என்பதுதான் கண்கூடான உண்மையாகும்.

கம்யூனிஸ்ட் என்ற போர்வையை மாட்டிக்கொண்டாலே கட்சியின் இலட்சியம் ஈடேறிவிட்டதாக கருதுகின்றனர். சட்டசபையைக் கைப்பற்றுவது ஒன்றினால் மட்டும் மக்களின் சகல வித பிணிகளையும் போக்கிவிட முடியும் என்று கருதுகின்றனர், புரட்சி புரட்சியென்று பொழுது புலர்ந்ததுமுதல் இருள் கவ்வும் வரையில் கர்ஜிப்பர், புரட்சி தோன்றாத காரணத்தை அறிய மறுப்பர்.

மாஸ்கோவின் மகிமையும் சீனாவின் சிறப்பையும் பேசுவதே சீரழிந்து கிடக்கும் சமுதாயத்தை செப்பனிடும் வழி என்று நினைக்கின்றனர். போகாத ஊருக்கு புரியாத வழி காட்டுவதில் புடம் போட்டு எடுக்கப்பட்டவர்கள் நமது தமிழ் நாட்டு கம்யூனிஸ்டுகள்.

தமிழகத்தில் கம்யூனிசம் வேர் விடவேண்டுமானால் அதற்கான அடிப்படை வேலைகளை கவனித்தாகவேண்டும். புரட்சியின் உச்சாணிக் கிளையில் வீற்றிருக்கும் லெனினையும் ஸ்டாலினையும் மா-சே-துங்கையும் காட்டிவிட்டால் மட்டும் போதாது. சமதர்மம் தழைப்பதற்காக புரட்சி பூப்பதற்காக சமூகத்தை செப்பனிட்ட செம்மல்களை அவர்களின் முன்னோடிகளை நிச்சயம் காண வேண்டும். சோவியத்தின் பொதுஉடமை மணம் வீசுகிற நாடுகளிலெல்லாம் சமூகப்பணியில் ஈடுபட்ட செம்மல்கள் ஏராளம். இதை எடுத்துக் காட்டுவதற்கு இங்குள்ள கம்யூனிஸ்டுகள் கூசுகின்றனர். எனவேதான் கம்யூனிஸ்டு இயக்கம் தமிழகத்தில் வேகமாக நடை போட முடியவில்லை. தளர்நடை போடுகிறது தத்தி விழுகிறது சிற்சில சமயங்களில் திசை தப்பி செல்கிறது. ஆகவே மேனாடுகளில் கம்யூனிஸ்டுகளுக்கு உள்ள திறமை இங்கு இல்லாமலிருக்கக் காண்கிறோம்.

கம்யூனிஸ்ட் கட்சியின் கொடியில் பொறிக்கப் பெற்றிருக்கிற சுத்தியுடன் சேர்ந்துள்ள அறிவாளை கரம்பிடித்து அறுவடையை குவித்திடும் உழவன் பெருமையை உலகுக்கு அறிவித்தவன் வள்ளுவப் பெருந்தகை. நாடு வாழ நாம் வாழ்வோம் என்ற நல்லுரை தந்தவனும் அவனே. எங்கெங்கு பயிர் தொழில் உள்ளதோ, எங்கெங்கு கைத்தொழில்கள் நடம் புரிகிறதோ அங்கெல்லாம் அதன் சின்னங்களான அரிவாளும் சுத்தியும் அவசியம் கிளர்ச்சியில் ஈடுபடும் என்பதை அறிவுறுத்தியவன் திருக்குறள் தந்த தெள்ளு தமிழ் புலவன். அந்த புலவன் தொடங்கிய பணி தொன்று தொட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது, இன்று திராவிட முன்னேற்றக் கழகமாக காட்சியளிக்கிறது. எனவேதான் தமிழகம் கம்யூனிசத்தை கசக்கும் பொருளாக கருதவில்லை. எட்டிக்காயாக எண்ணவில்லை. தமிழகம் கம்யூனிசத்தை கட்டிக்கரும்பாக கருதுகிறது. கனி ரசத்தைப் போல் அள்ளிப்பருக ஆசைப்படுகிறது. ஆனால் அந்த ஆசையை தடுத்து அறிவுக்கும் ஆற்றலுக்கும் விலங்கிட்டு வேதனையை தேக்கி வந்துள்ளது இந்த நாட்டின் மூடத் தனத்தின் முடை நாற்றம் வீசும் பழமையும் அதை பாதுகாக்கும் ஆரியமும், அதன் அரண்களான புராண இதிகாசங்களும், இந்நாட்டு மக்களை சாதியால் மதத்தால் பற்பல பழக்க வழக்கங்களால் பிரித்து பேதப்படுத்தி பிரிவினையைத் தூவி ஒன்றுபட்டுக் கிடந்த சமுதாயத்தை உருக்குலைத்து விட்டது பழமை. தமிழ் நாடு இன்று கலனை வீடு கரம்பான நிலம் கள்ளியும் காளானும் அடர்ந்த புதர். எனவே இப்படிப்பட்ட சூழ் நிலையில் நல் வாழ்வு மலரவேண்டுமானால் ஒய்யார பேச்சுமட்டும் போதாது; உலகைக் காட்டிவிட்டால் மட்டும் ஆகாது.

"நோய் நாடி நோயின் முதல் நாடி அதுதீர்க்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்" என்ற வள்ளுவன் வாக்கியத்தின்படி தமிழகத்தின் நிலையை உணர்ந்து அதற்குத் தகுந்த மருந்து தரப்படவேண்டும். அந்த மருந்தை நல்கும் வைத்திய வள்ளல்களாக திகழ்பவர்கள் தமிழ் நாட்டு கம்யூனிஸ்டுகள் அல்ல. கம்யூனிஸ்டுகளுக்கு தெரிந்த ஒரே மருந்து சமதர்மம் ஒன்றுதான். ஆகவே சமூக தர்மத்தை நிலை நாட்டுவதற்கு முன்பாக சமதர்மத்தைப் பற்றி கோஷித்து வருவதால் இத்துணை ஆண்டுகள் பணியாற்றியும் மக்களை பண்படுத்த முடியவில்லை. அவர்கள் நடத்திய வேலையில்லாத் திண்டாட்டம் வீணானது; கூலி உயர்வு தோல்வியுற்றது. அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் அன்றாடப் பிரச்னை உடனடிதேவை ஆகிய இவை இரண்டுமே. எனவே அந்த இயக்கம் சில நேரங்களில் பச்சை பசுந்தழை அடர்ந்த சோலையாக இருக்கிறது. பல நேரங்களில் பட்ட மரங்கள் சூழ்ந்த காடாக விளங்குகிறது. இதனால் அவர்களுக்கும் பயனில்லை; அவர்களை அண்டிக் கிடக்கும் மக்களுக்கும் இலாபமில்லை,

திராவிட முன்னேற்றக்கழகம், கம்யூனிஸ்ட் கட்சியின் நடைமுறைக்கு நேர்மாறானது. கொள்கையில், குறிக்கோளில் உள்ள ஒற்றுமை நடைமுறையில் இல்லை. கம்யூனிஸ்ட்டுகளின் நடைமுறைக்கும் தி. மு. கழகத்தினர்களின் நடைமுறைக்கும் உள்ள முறைகள் மட்டுமல்ல, நெறியும் வேறுபட்டதுதான்.

இன்றைக்கு உலகப்பாட்டாளி மக்களின் வளர்ச்சி பெற்ற நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் தலைவர்கள் சுரண்டல் அற்ற சமுதாயத்தை அமைப்பதற்கு காட்டுகிற வழி என்ன? தொழிலாளி வர்க்கக் கட்சியின் தலைமையில் தான் மார்க்கிச-லெனினிச கொடியின் கீழ்தான் சாதியும் சுரண்டலும் ஸ்தாபன ரீதியான மதமும் ஒழிந்த இலட்சிய புரியை அடையமுடியும், புது வாழ்வும் பொதுவுடமையையும் நிறைவேற்ற முடியும் என்பதுதான் உண்மையைக் கண்ட உலக நாடுகளின் தலைவர்கள் தரும் தெளிவான முடிவு. இதைத் தி. மு. கழகம் மறுக்கவுமில்லை, அதை மறைத்துப் பேசவும் விரும்பவுமில்லை. ஆனால் அப்படிப்பட்ட பாட்டாளி வர்க்க ஆட்சியை அமைக்கக்கூடிய தொழிலாளர் வர்க்கக் கட்சி எது என்பதில் தான் முரண்பாடு ஏற்படுகிறது. அங்கேதான் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், தி. மு. கழகத்திற்கும் உள்ள வேறுபாடு தெள்ளத் தெளியத் துலாம்பரமாக்கப்படுகிறது.

அறிஞர் அண்ணா ஒரு முறை ட்ராம்வே தொழிலாளர்கள் நடத்திய திராவிட நாடு பிரிவினை ஆதரிப்புக் கூட்டத்தில் பேசும்போது "தென்னாட்டிலே ஒரு உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி இருக்கிறதென்றால், உண்மையான பொதுவுடமை இயக்கம் இருக்கிறதென்றால் அது திராவிட முன்னேற்றக் கழகம்தான் எனக்கு மேல்நாடுகளுக்கு செல்ல வாய்ப்பும் வசதியும் கிடைக்குமானால் அப்பொழுது மாஸ்கோவுக்குச் செல்லுவேன். இதை மாலெங்கோவிடம் சொல்லுவேன்" என்று தெளிவாகவே குறிப்பிட்டார்கள். இதைக்கேட்ட இந்த நாட்டு கம்யூனிஸ்ட்டுகள் ஆத்திரப்பட்டார்கள், ஆவேசங் கொண்டார்கள். தி. மு. கழகமா உண்மையான கம்யூனிஸ்ட்கட்சி? அப்படியானால் நாங்கள் நடத்திக் கொண்டிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சி போலி கட்சியா? என்றும் கேட்டார்கள். கம்யூனிஸ்ட் கட்சியே இல்லாத நாடுகளே இல்லை என்று சொல்லும்படி கொரியாவிலே 10 லட்சம், வியட்நாமிலே 7 லட்சம், பிரான்சிலே, 8 லட்சம் இதாலியில் 21 லட்சம், பெல்ஜியத்தில் 1 லட்சம், பிரிட்டனில் 35 ஆயிரம், ஹாலந்தில் 50 ஆயிரம், டென்மார்க்கில் 5 ஆயிரம், ஸ்வீடன் 60 ஆயிரம், பின்லாந்து 50 ஆயிரம், ஜப்பான் 1 லட்சம், இந்தியாவில் 60 ஆயிரம் என்று இப்படி எங்கெங்கும் பரவி கிடக்கும் எங்களைப் பார்த்தா போலிக் கட்சி என்று சொல்லாமல் சொல்லுகிறீர்கள்; புரியாமல் பேசுகிறீர்கள் என்றும் கேட்டார்கள். சீனத்தில் நடப்பது கம்யூனிஸ்ட் கட்சி, சோவியத்தில் நடப்பது சோஷியலிஸ்ட் கட்சி என்பதை தெரிந்த பின்பும்கூட அறிஞர் அண்ணாகூறினார், இன்றைக்கு கம்யூனிஸ்ட் நாடுகளாக உள்ள இடங்களிலிருந்து ஒரு தூதுக் குழு வந்து தென்னாட்டில் விசாரணை நடத்துமானால், செய்தி சேகரிக்குமானால், ஆதாரங்கள் ஆயிரம் ஆயிரம் காட்டி நிரூபிப்பேன் என்று எந்த தைரியத்தில் கூறினார் என்பதைத்தான் தமிழகத்தின் 'போர்டுபோட்ட கம்யூனிஸ்ட்டுகள்' சிந்தித்து பார்க்க வேண்டும்.

—வெற்றிவீரன்

முன் இதழ் தொடர்ச்சி

பலி பீடத்தில்......

குதூப் உதீன்: ஷா ஆலம்பனு....!

முகமதுகோரி: அமைதியோடு யிரு உதின்! நாட்டைப் பறி கொடுத்தவன் காட்டுமிராண்டியாக மாறுவது இயற்கைதானே!

பிருத்விராஜன்: ஆ...! நானு காட்டுமிராண்டி? ஜெயசந்திரரே, கண்டீரா தேள் கொடுக்கு கக்கும் விஷத்தை? நான் காட்டுமிராண்டியாம்! உன் நாட்டான் காட்டுமிராண்டியாம்! ஜெயசந்திரரே, நான் காட்டுமிராண்டி! கேளும், களியும், சிரியும்! நன்ருகச் சிரியும்! மனம் விட்டுச் சிரியும்! மாற்ருனை துணைக்கழைத்து என் கரங்களுக்கு விலங்கிட்டதின் மூலம் இந்நாட்டை அடிமைப் படுகுழியில் தள்ளியவரே! உள்ளங் குளிரும் வரை சிரியும்! காது கேட்கிறதா ஜெயசந்திரரே, காட்டுமிராண்டி! புரிந்துக் கொண்டீரா அதன் அர்த்தத்தை? இராஜபுத்திர வம்சத்தில் பிறந்த நான் இன்று காட்டுமிராண்டி! நானை நீர் காட்டுமிராண்டி! ஏன் விழிக்கிறீர்? கேட்பதற்குப் பயங்கரமாகயிருக்கிறதா? அதோ, பயங்கரம் கோரியின் உருவில்! கோரியே! இன்னும் ஏதாதவது வசவு வார்த்தைகள் அகராதியில் இருக்கிறதா வென்று பாரும்! பயப்படாதீர்! தாராளமாக வீசும்! தயங்காமல் வீசும்! உம் பக்கத்திலே ஜெயசந்திரர்கள் இருக்கும் வரை பயப்பட வேண்டாம்.......

முகமதுகோரி: போதும் நிறுத்தடா! மன்னர் ஜெயசந்திரரின் மகளை நீ திருடியது குற்றம்தானே?

பிருத்விராஜன்: ஆடு நனைகிறதேயென்று ஓநாய் அழுததாம்! என் குற்றத்தை விசாரிக்க நீயார்? எனக்கும் ஜெயச்சந்திரருக்கும் விரோதம்? அதிலென்ன நீர் கொண்டீர் குரோதம்?

ஜெயசந்திரன்: வாதமிடதே! நான் கேட்கிறேன்: குற்றம் தானே?

பிருத்விராஜன்: என்னை ஓர் காவல்காரனுக சிலை வடித்து உமது சுயம்வர மண்டபத்தில் நிற்க வைத்தது....?

ஜெயசந்திரன்: குற்றக் கூண்டிலே நிற்பது நீ! நானல்ல!

பிருத்விராஜன்; தெரிகிறது எனக்கும், நீரும் அடிமைக் கூண்டிலே இருப்பதாக!

முகமதுகோரி: ஏன், வீண் விசாரணை? கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல முடியவில்லையென்ருல் குற்றவாளி என்றுதான் பொருள்!

ஜெயசந்திரன்: குற்றவாளிதான் இவன்! என் பரம்பரைக்கே அவமானத்தைத் தேடித்தந்தவன்தான் இவன்! கொண்டு செல்லுங்கள் இந்தக் கயவனைப் பலி பீடத்திற்கு....!

பிருத்விராஜன்: ஜெயசந்திரரே! என்னைப் பலி பீடத்திற்கு அனுப்பும் நீரும், இன்னும் சில நாட்களுக்குள் அங்கே வராமலிருக்க மாட்டீர்! பலி பீடம் இன்று என் இரத்தத்தைச் சுவைக்கப் போகிறது; நானை உமது இரத்தத்தைக் குடிக்கக் காத்துக் கொண்டிருக்கிறது!

முகமது கோரி: மிரட்டுகிருன் உம்மை!

ஜெயசந்திரன்: சாபம் இடுகிருன்!

பிருத்விராஜன்: இரண்டும் இல்லை! எச்சரிக்கிறேன்! முன் கூட்டியே எச்சரிக்கிறேன் உமக்கு ஏற்படப் போகும் அபாயத்தை! என்னை அனுப்புகிறீரே பலி பீடத்திற்கு—அதன் மூலம் இந்தப் பரந்த தேசத்தின் சுதந்திரத்தையே பலி கொடுக்கப் போகிறீர் என்று எச்சரிக்கிறேன் ஜெயசந்திரரே, எச்சரிக்கிறேன்! உம்பக்கத்தில் அமர்ந்திருக்கும் இந்தக் கொடியோனின் உள்ளம் வஞ்சக முதலைகள் கொண்ட ஓர் பெரும் அகழி! விஷப் பூண்டு நிறைந்த புதர்க் கூட்டம்!

முகமது கோரி: இழுத்துச் செல்லுங்கள் இவனை!

பிருத்விராஜன்: போகிறேன் ஜெயசந்திரரே, போகிறேன்! கூடிக் குடிகெடுப்போனிடம் தேடி நேசம் வளர்ப்பவரே, போகிறேன்—போவதற்கு முன் ஒன்று சொல்லிவிட்டுப் போகிறேன்! அயலானை இந்த நாட்டிற்குள் நுழைய விட்டீர்; அதன் மூலம் சரித்திரத்தில் அழிக்க முடியாத களங்கத்தைத் தேடிக் கொண்டீர்....

தோற்றம் எட்டு.

[டில்லியிலுள்ள பிருத்வியின் அரண்மனையில் கோரியும் குதூப் உதீனும்.]

குதூப் உதீன்: இனி அடுத்த கட்டம்?

கோரி: ஏமாளி ஜெயசந்திரனை ஒழித்துக் கட்டும் படலம்....

குதூப் உதீன்; உடனே ஆரம்பிக்கிறேன், ஷா ஆலம்பனு!

தோற்றம் ஒன்பது.

[கன்னோசி அரண்மனையில், ஜெயசந்திரன், குதூப் உதின், அன்னியர் படை.]

காவலன்: மகாராஜா! மகாராஜா!

ஜெயசந்திரன்: என்னடா?

காவலன்: கோரிமன்னரின் படைகள் திடீரென நம் படைகளைத் தாக்குகின்றன!

ஜெயசந்திரன்: ஆ...! படைத் தலைவர் எங்கே?

[குதூப் உதினும் அவன் படையினரும் மன்னனின் அறைக்குள் நுழைகிருர்கள்.]

குதூப் உதீன்: ஏன், கொன்றுவிட்டேன்!

ஜெயசந்திரன்: அட பாவிகளே!

குதூப் உதீன்: அட ஏமாளியே! இன்னமுமா தெரியவில்லை? அன்றே சொன்னுனே உன் அன்பு மருமகன் பிருத்வி!

ஜெயசந்திரன்: வஞ்சகர்களே! வசமாக வளைத்து விட்டீர்களே, என்னை!

குதூப் உதீன்: சாவுப் பாதை கண்ட மிருகத்தின் கூச்சல்! கொண்டு போங்கள் இந்த இனத்துரோகியையும் பலி பீடத்திற்கு!

தோற்றம் பத்து.

[பலி பீடத்திலே ஜெயசந்திரன், கொலைஞர், அதிகாரி கிழே...]

ஜெயசந்திரன்: அய்யோ! பிருத்வி! இதோ வந்து விட்டேனடா! பலி பீடத்திற்கு, வந்து விட்டேன்! வளமார் நமது தாயகத்தை அந்த வஞ்சகர்களிடம் ஒப்படைத்து வந்து விட்டேன்! காதலில். வீரத்தில், செல்வத்தில் திளைத்திருந்த என் நாட்டு மக்களை அந்த சூது மதியினரின் சூழ்ச்சிக்கு இறையாக்கிவிட்டு வந்து விட்டேன்! சிந்து நதியின் தீரத்தை, இமயத்தின் சாரலை, விந்தியத்தின் வீரத்தை காவேரிக் கரையின் நெற்களஞ்சியத்தை அந்த எத்தர் கூட்டத்திற்குத் தானம் தந்து, வந்துவிட்டேன்! அழிக்கமுடியாத அடிமைச் சின்னத்தை...அய்யோ! என் நாட்டு மக்களின் இதயங்களில் பொறித்துவிட்டு வந்து விட்டேன்! பிருத்வி! என் அன்பு மருமகனே! என்னை மன்னித்துவிடடா; என்னை மன்னித்து விடு! சூழும் புகழோடு வீரச் சரித்திரத்தில் இடம் பெற்றவனே, பாழும் பழியோடு நிற்கும் இந்தக் கோழையை மன்னித்து விடு! மன்னிப்பாயாடா, என் வீரத்திருவிளக்கே....? சம்யுக்தா! என் செல்வத் திருமகளே! என்னைப் பழிக்காதே! இகழாதே! உன் தந்தை இராஜபுத்திரக் குழந்தைகளுக்கு அடிமைத்தளையைப் பூட்டிவிட்டானம்மா! இனி என்னைப் போன்ற தந்தைமார்களை, காதலோவியமே! உன்னைப் போன்ற பெண்கள் அடையவேண்டாம்! என்னைப் போன்று இந்த நாட்டிலே வேறுயாரும் இனி உலவ வேண்டாம்? வேண்டவே வேண்டாம்! நான் ஓர் அழுக்கன்! இழுக்கன். என் நாட்டு பெருங்குடி மக்களே! என்னை மன்னித்து விடுங்கள்! அய்யோ! அமைச்சரே.... என தருமை அமைச்சரே! என்னை மன்னித்து விடுங்கள். தகாத வழியில் நடக்கத் துணிந்தபோது தடுத்து நிறுத்திய உம் அறிவாற்றலை ஏசி இகழ்ந்த என்னை மன்னிப்பீரா....? தாயின் வாய்க்குக் கடிவாள மிட்டேன்! தாயகத்திற்கு விலங்கிட்டேன்! தாய் மொழியைக் கடை மொழியாக்க உதவினேன்...! என்னை எல்லோரும் மன்னிப்பீர்களா? வருங்கால சந்ததியினரே! மறக்குடி தோன்றல்களே! குமாரவேலர்களே! என்னைப் பழியுங்கள்—ஆனுல் என்னைப் போல் மாருதீர்கள்! தாயகத்திற்கு நான் பூட்டிய அடிமைத் தளையைத் தகர்த்தெரிய என்ருவது ஓர் நாள் உங்களிடையே ஓர் வீரத் தளபதி தோன்ருமலிருக்கமாட்டான்! அன்னிய ஏகாதிபத்தியத்திற்கு, என் செல்வங்களே! அவன் அழைப்பு விடுத்தால், 'இதோ, வந்து விட்டோம் என் அண்ணுவே!' யென்று இலட்சக் கணக்கிலே விடுதலைப் போராட்டத்தில் வீரராய்ச் சேருங்கள்! அடிமை வாழ்வை அறவே வெறுங்கள்! வீரச் சுடரொளிகாள்! அடிமை இருளை அகற்றுங்கள்...விரட்டுங்கள்....

அதிகாரி: போதும், நிறுத்துங்கள்...கொலைஞரே! உம்.... நடக்கட்டும்!

[ஜெயச்சந்திரன் தலைத் துண்டிக்கப்படுகிறது....இருள் கப்புகிறது.]

[திரை விழுகிறது.]

முற்றும் —அண்ணு அன்பன்

காதற் கனவு!

கண்களோடு விளையாடிக் கண்மயைச் சென்ற
கனவுதனை நான் மறந்து கண்விழித்து விட்டேன்
எண்ணற்ற கற்பனைகள் என்னுகின்ற உள்ளம்
என்னுள்ள மாதையினுல் என்கனவைத் தேடி
விண்ணிடையே முகிலினிலே, வில்லிடையே எங்கும்
விசும் பிடையே நோக்கினேன், வேறெதுவும் காணேன்!
மண்ணிடையே புலர்ந்திட்ட பொழுதிடையே கண்டேன்
மலர்களெலாம் என் கனவை மணமாக வீசும்!

முல்லை மலர் ஒருபெண்ணின் முறுவலினைக் காட்டும்
முகிழ்க்கு நறுந் தாமரைஅப் பெண்முகத்தைக் காட்டும்
கொல்லையிலே வளர்கொடிகள் அவளிடையைக் காட்டும்
குவளைமலர் அவள் விழியின் குளுமைதனைக் காட்டும்
எல்லையற்ற புல்வெளியில் கேட்குமவள் பேச்சு!
இரவிடையே பகலிடையே எப்பொழுதும் வந்து!
புல்லியிரு விழிகளோடு விளையாடும் போகும்
பொற்கனவும் என்காதற் கனவாகு மன்றே?

—தமிழ் ஒளி.

சுகம் எங்கே?......

புலவர். ஏ. கே. வேலன்

இது ஒரு சித்திரக்காரன் கதை. திருட்டையே தொழிலாய்க் கொண்டு வாழ்ந்த சித்திரக்காரன் கதை. மனோதத்துவ அடிப்படையில்—அவனது சித்திரத்தை பிறர் திருடிக் கொண்டதாக அவன் கற்பித்துக் கொண்டபோது—அவனது ஆத்திரம் எவ்வளவு பொங்கிற்று என்பதையும், அது போல் பறி கொடுத்த மற்றவர்க்கும் இருக்காதா என்பதையும் விளக்குகிறார், நண்பர். இது வெறும் கற்பனைதான்; இதற்கு யாராவது, ஏதாவது உள் அர்த்தம் கற்பித்துக் கொண்டால் அதற்கு நாங்கள் பொறுப்பாளிகளல்ல.

சுகம் எங்கே? என்ற தலைப்பைக் கண்டதும் ஒரு சிலருக்கு, மஹாராஷ்டிர இலக்கிய ஜீவன், மறுமலர்ச்சியின் தூதுவன், காண்டேகர் அவர்களின் ஒப்பற்ற நவீனங்களில் ஒன்றான சுகம் எங்கே நினைவுக்கு வரலாம்.

வேறு சிலருக்கு இதுபோது மாடர்ன் தியேட்டர்ஸார், ஆங்கில ஆசிரியன் ரெயினால்ஸின் போர் வீரன்மனைவி, (Soldiers wife) என்ற கதையினை அடிப்படையாக வைத்துத் தயாரிக்கும் சுகம் எங்கே? என்ற திரைப்படம் நினைவுக்கு வரலாம்.

மற்றும் சிலருக்கோ, தோழர் கருணாநிதி யசோதரா காவியத்தைத்தழுவி அதில்வரும்அமிர்தமதியின் விபச்சார வெறியாட்டத்தை சித்தரித்ததாகக் கூறும் சுகம் எங்கே? நினைவுக்கு வரலாம்.

யாருக்கும் இவைபற்றி நினைவுக்கு வந்தாலும் வராவிட்டாலும் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் சுகம் எங்கே? சுகம் எங்கே? என்ற கேள்வியும், முயற்சியும் வந்து கொண்டுதானிருக்கிறது. ஆதலின் அந்த சோபிதமும் சுகம் எங்கே? என்ற சொற்கோவையும் யாரோ சிலருக்கு மட்டும் சொந்தமல்ல......!

காதலன் காதலின் கடைக்கண் வீச்சிலும், கனிவான மொழியிலும் சுகத்தை காணுகிறான்.

போர் வீரன் சுழலும் வாள் வீச்சிலும், சொட்டுகிற மாற்றான் குருதியிலும் சுகத்தை தேடுகிறான்.

பெற்றோர் பிள்ளைகளின் மழலையிலும் அந்த பிஞ்சுக் கரங்கள் தங்கள் மேல் தவழ்வதிலும் சுகம் பெறுகின்றனர்.

அண்ணல் காந்தியனையோர் உலகத்தின் அமைதியிலே தங்கள் சுகத்தைக் கண்டனர்.

ஆர்பாட்டக்காரர்கள் போர்ப் பாட்டு பாடுவதை சுகமாக நினைக்கின்றனர்.

உத்தமர்கள் ஊருக்குழைப்பதை சுகமென்கிறார்கள்,

போகப் பிரியர்கள் அந்த சுகத்திற்காக விபசார விடுதிகட்கு ஓடுகிறார்கள்.

கற்புடைய மங்கை கணவன் அங்கமெல்லாம் புழுத்து அழுகியவனாயினும் அவனே, தன் சுகமென வாழ்கிறாள்.

விபச்சாரி வேளைக்கு வேளை ஆள் மாற்றுவதே சுகமென வியாபாரம் நடத்துகிறாள்.

இலக்கியவாணன் புத்தம் புதிய கருத்துக்களை, கவிதையாக, காவியமாக, கற்பனை ஓவியமாகத் தருவதே சுகமென மகிழ்கிறான்.

எழுத்தாளன், இரவல் கருத்துக்களுக்கு தழுவல்களுக்கு சொந்தம் கொண்டாடுவதே சுகம் என்கிறான்.

சுகத்தை யார் யார் எங்கெங்கே தேடுகிறார்கள் என்ற பட்டியலை இத்தோடு நிறுத்திக் கொண்டு உதாரணத்திற்கொன்று சொல்வோம்.

ஆங்கில ஆசிரியன் ரெயினால்ஸ் தன் "போர் வீரன் மனைவி" யில் பெரிய இடத்துப் பெண்ணொருத்தி, கன்னித்தாயான கயமையைக் கண்டிப்பதிலே அவள் காமக் கூடத்துக்கு உடந்தையான மதகுருவின் மன்மத லீலையை வெறுத்து எழுதுவதிலே திருப்தி கொண்டான். அதே கதையில் மற்றொரு பாத்திரமான சீமான் மகன், தான் விரும்பிய பெண் கிடைக்காத ஏமாற்றத்தால் மாமியையே கற்பழித்து விட்டதாக கற்பனையும் இருக்கிறது. அதை முன்னம் தமிழால் தழுவிய பெருந்தகை அந்த ஆபாச பகுதிகளை விட்டார் இல்லை. இதுபோது சாமியாரின் விபச்சாரமும் மாமியாரைக் கற்பழிக்கும் மாமாதகமும் விலக்கப் பட்டுள்ளது, சோபிதமும் சுகமும் அவ்வித ஆபாசக் கற்பனையில் இல்லை என்ற கருத்தோடு.

இதுவரை சுகம் எங்கே என்ற தலைப்பின் ஆதி மூலத்தைச் சொல்லி விட்டோம். இதனைத் தொடர்ந்து ஒரு உருவத்தையும் படைக்க வேண்டியிருக்கிறது உண்மையைப் பின்னணியாக வைத்து.

பேர் பெற்ற சித்திரக்காரன் ஒருவன். அவன் தான் எழுதப் பிறந்தான் என்று இவ்வுலகம் நம்பிற்று. அவன் தூரிகையை (Brush) அசைத்தால் சுந்தரக்கலைகள் உயிர்பெற்று எழுந்தன. சொல்ல வேண்டுமா? பொருளும் புகழும், யோகமும் குவிந்தன. இமயத்தின் உச்சிக்கு ஏறி விட்டான். மேற் கொண்டு செல்ல இடமில்லை. புகழின் கிறுகிறுப்பில் தான் ஏறி வந்த வழியும் மறந்து போயிற்று. அந்நிலையில் அடிவாரத்தில் பலர் அலறிக் கொண்டிருந்தனர், அத்தனை பேரும் சித்திரக்காரர்கள்தான்!

அவர்களில் கோண கும்ப சுந்தரபாலர் குமுறும் நெஞ்சத்தோடு நின்றார். "ஏனையா என்று கேட்டேன்." என் சித்திரம் பறி போயிற்று என்று சித்தம் துடித்தார். "எங்கே எப்படி" என்றேன். "அதோபார் உச்சியிலே உலாவுகிறானே" என்று சுட்டிக் காட்டினார். "ஆம் ஜெகம் புகழும் சித்திரக்காரன்" என்றேன். "அவனேதான்—கொண்டு போய்விட்டான் என் புகழை கல்யாணியின் கண்ணீர் என்ற கருத்தோவியத்தை கலைத்து எழுதி விட்டானடா தம்பி" என்று கதறினார். "அழகாகத்தானே இருக்கிறது" என்றேன். "அந்த அழகுக்குச் சொந்தக்காரன் நான்—அடிவாரத்தில் நிற்கிறேன்—என்னைப்படியாக மிதித்துக் கொண்டுமேலே ஏறியிருக்கிறான். இத்தனைக்கும் அவன் அதிலே சாதித்தது என்ன தெரியுமா? காஞ்சிக் கலரையும், பாண்டிக் கலரையும் கலந்து குழைத்து ஒரு புதுப் பூச்சு மேலே பூசினான், அவ்வளவுதான். சித்திரமும் இரவல்; மேலே பூசிய சாயமும் இரவல் என்பதை இப்போதாவது தெரிந்து கொள் நீ" என்று அதட்டினார். அப்பால் நகர்ந்தேன்.

நாஞ்சில் நாட்டு ஆசாமி ஒருவர் ஓலமிட்டுக் கொண்டிருந்தார். உனக்கு நேர்ந்த விபத்து என்ன என்றேன். கேரளத்திலிருந்து தான் கொண்டு வந்த கல்யாணப் பெண்ணை என்று ஆரம்பித்தார். மாலையிட்டது யார் என்று மறித்துக் கேட்டேன். அவள் மங்கையல்ல மாலையிட, அந்த அழகோவியத்துக்கு தமிழ்க் கோலம் கொடுத்தது நான்தான், அதனை தட்டிப் பறித்துக் கொண்டு—அதிலிருந்து என் பெயரை அழித்து விட்டு த்ன் பெயரை பொறித்துக் கொண்டான்.

அதன் உண்மையைச் சொல்கிறேன் கேள். கற்பனையும் கலரும் கேரளத்தார் தந்தது. அதைக் கண்ணாடியாக பிரதிபலித்தது நான். என் உழைப்பை முதலாக வைத்து உயர்ந்தது அதோ உச்சியில் உலாவும் பேர் பெற்ற சித்திரக்காரன்! இது சரியா, நெறியா, முறையா? என்று முனகினார். மெள்ள நழுவி விட்டேன். எதிரே ஒரு வட நாட்டான் எள்ளி நகைத்துக் கொண்டிருந்தான். யாரைப் பார்த்தையா சிரிக்கிறீர் என்றேன். உன்னினத்தை, உங்களில் ஒருவனை என்று உச்சியைக் காட்டினான். எதற்காக என்று எதிர்த்துக் கேட்டேன். எங்கள் சித்திரம் ஒன்றை எடுத்து வந்துவிட்டான் என்றார். எனக்குப் புரியவில்லை. "ஷாதி" என்றொரு சித்திரம். தென்னாட்டு தீரனே நீ வெறுக்கும் இந்திப் பெண்ணாள்! கம்சனின் தங்கை பேரால் இங்கே காட்சிக்கு வைக்கப்பட்டாள், உழைப்பு என்னுடையது. உருவாக்கியது நான். அதற்கு விலை வாங்குவது அவனா? என்று ஆர்ப்பரித்தார். பதில் சொல்ல முடியாமல் தலை குனிந்து சென்றேன்.

பின்னும் இருவர் சேர்ந்து கட்டிக்கொண்டுஅழுதனர். அவர்களை எட்டிப்பிடித்து விட்டு ஏனென்று கேட்டேன். ஏமாந்து விட்டோம் எங்கள் சித்திரங்கள் இரண்டு ஒன்றாகச் சேர்ந்து ஒட்டப்பட்டது அதுவும் சந்தையில் பணமாக்கப் பட்டது என்று கதறினர். அந்த ஒட்டு வேலை செய்தது யார் என்று கேட்டேன். அவர்களும் உச்சியைக் காட்டினர். அடுத்தார்ப்போல் ஒரு கன்னடத்தார் வெற்றிப் புன்னகையோடு வந்தார், விவரம் கேட்டேன் என்னை யறியாது என் சித்திரத்தை எடுத்துக்கொண்டு எனக்கு நாமம் போடப்பார்த்தார்; விட்டேனில்லை விலையும் வாங்கினேன். என் கற்பனைக் கண்ணீரைத் தழுவியது என்று முத்திரையும் போட வைத்தேன் என்று சிரித்தார்.

மேலும் கொஞ்சம் நகர்ந்தேன் ஒரு கும்பலே அங்குகூடி நின்றது. அருகில் சென்று பார்த்தால் பறி கொடுத்த நெஞ்சத்தோடு பதை பதைத்துக்கொண்டிருந்தனர் வேறு சில சித்திரக்காரர்கள். அவர்களில் சட்டம் அடித்தது நான் என்றான் ஒருவன். சாயம் குழைத்தது நான் என்றான் மற்றொருவன். அந்தச் சாயக் கிண்ணம் என்னுடையது என்றான் இன்னொருவன். எடுத்துப் பூசிய தூரிகை எனக்கு சொந்தம் என்று சொல்லிக்கொண்டொருவன் நின்றான். இத்தனை பேரையும் பார்த்து சிரித்தது ஒரு கிழம். அந்தக் கிழத்தை விசாரித்தேன். இது என்னுடைய பழைய சித்திரம். யார் வேண்டுமானாலும் எடுத்து எழுதிக்கொள்ளுங்கள் என்று வீசி விட்டேன். என் சித்திரம் பட்டபாடு கொல்லன் உலை இரும்பு பட்டிராது, போட்டியிட்டுக்கொண்டு உழைத்தனர். புது வண்ணச் சாயங்களை குழைத்தனர். எப்படி எப்படி அழகு படுத்தலாம் என்று அலங்காரச் சாத்திரத்தைக் கரைத்தனர். இவர்களுக்குமேலாக எப்படித் தீட்டினால் மனோகரமா இருக்கும் என்பதை ஒரு பழம் பெரும் ஓவியக்காரன், இதுதான் சித்திரம், இப்படித்தான் தீட்டவேண்டும் என்று தமிழுலகுக்கு காட்டியவன். இந்தக் கலைக்கு, வேந்தன் கற்பனை செய்து காட்டினான். அனைத்திற்கும் தானே சொந்தக்காரனாகிவிட்டான் ஏமாந்தார் உழைப்புக்கு எஜமானன், என்று உச்சியைக் காட்டினார். இன்னுமொருவன் இவர்களுக்கெல்லாம் முன்னாகத் தன்னுடைய காளிதாசி என்ற சித்திரத்தை என்னமோ நாட்டு இளவரசியாக பெயர் மாற்றி வியாபாரம் செய்து விட்டதாகச் சொல்லிக் கொண்டிருந்தான்.

ஆக திரும்பிய திசையெல்லாம் ஓலமிடும் சித்திரக்காரர்களைக் கண்டேன். அவர்களுடைய வேதனைக் குரலைக் கேட்டேன். அந்த சோகக் கதையை நான் கேட்ட நேரத்தில் உச்சியிலிருந்து உறுமல் கேட்டது. நிமிர்ந்து பார்த்தேன். ஜெகம் புகழும் சித்திரக்காரன் சீற்றமே உருவாகக் காட்சி தந்தார்; பதறினார். பதை பதைத்தார், பட்டாசுபோல் வெடி வெடித்தார்; காரணம் என்ன என்று கேட்டேன். நான் உச்சிக்கு வந்த நேரத்தில் அடிவாரத்தில்போட்டுவந்த சித்திரம் கொள்ளை போயிற்று என்று குமுறினார். "சொந்த சித்திரமோ" என்றேன். "தழுவல்" என்றார்; சரிதான் உன்னிடம் கற்ற பாடத்தை அது காட்டிவிட்

[4-ம் பக்கம் பார்க்க]

கட்டி ஆண்டவர், கங்கை கொண்டவர்,
கவின் குலோத்துங்க சோழ மன்னவர்,
எட்டி வந்த பகையினைத் தூசுபோல்,
இட்டழித்தவர், ஏறென வாழ்ந்தவர்,
அட்டதிக்கிலும் அறம் வளர்த்தவர்,
ஆட்சி செய்யும் முறை வகுத்தவர்,
நட்ட கல்லைப் படிக்கல்லாக்கியே,
ஞாலமுற்றும் புகழ்தர வாழ்ந்தவர்,
சொன்ன வார்த்தையிற் றேள்துடித்து, " கல்
தூக்கு ! தூக் "கெனத் துரத்திவந்தவர்,
மின்னல் மேனியர்; வாள் சுழற்றிடும்
வீரமங்கையராக வாழ்ந்தவர்,
" தாய்த் தமிழ்த்திரு நாடெனில் எம்உயிர்
தனிப்புகழ் அதுவளர்த்திடும் நற்பயிர்!
சேயனைத் துடன்கூடி ஆடுவோம்!
தீத்திறத்து மறக்குலம் பேணுவோம்!
வாய்வெடித்துப் பிதற்றிடும் பித்தரின்
வாய்கிழித்து நேர்மை நாட்டுவோம் "
என்று வாழ்ந்த இன்பத்திராவிடர்
இடையில் வீழ்ந்த கதையினைக் கூறுவேன்.
தெய்வமில்லை, அத்தேவை இன்மையால்
தேயமே உயிர்த்தெய்வத் தன்மையாம்!
சைவமாம் இழி சமயம் இல்லையாம்!
தமிழர் தம்குணம் சமய எல்லையாம்!
திங்கள் ஞாயிறு மாமழை போற்றினர்!
" தீரம் " நோக்கி இருகரம் கூப்பினர்
எங்கும் இன்பஎழில் மலர்க்காடுகள்!
ஏறு காளையர், இழையும் கன்னி மான்!
அந்தி வந்ததேல் அகநானூறுதான்!
அடுத்த காலையிற் புறநானூறு காண்!
வந்தவர்க்கெலாம் வாழ்வு தந்து நல்
மனம் மிகுந்திவர் வாழ்ந்திடுங்காலையில்
ஆடு மாடுகள் முன்நடந்திட
ஆரணங்குகள் பின் தொடர்ந்திட
காடு யாவையும் கடந்து சிற்சிலர்
கன்னித் தாயக எல்லை தொட்டனர்!
மஞ்சள் மேனியும் வஞ்ச நெஞ்சமும்
மானமென்னும் ஓர் எண்ணம் இன்மையும்
கொஞ்சும் வார்த்தையும் கொண்டவர் தமிழ்க்
கோட்டை வாசற்படியை மிதித்தனர்.
சொந்தமாக ஓர் நாடிலாதவர்
தொட்ட பூமியில் சூழ்ந்து வாழ்பவர்
எந்த நாடும் தம் சொந்த நாடென
ஏற்று மாந்தரை மாற்றி ஆள்பவர்
சொத்து என்பதோ தர்ப்பை ஒன்றுதான்
தூய்மை என்பதோ துளியும் இன்மையாம்
வித்தை யாவையும் சூழ்ச்சிப் பள்ளியில்
விரும்பிக் கற்றதாம்; வேறு என் சொல!
நச்சரவுகள் மனித மேனியில்
நடமிடும் கதை இவர்கள் காதையாம்!
அச்சம் மிக்கவர் கோழையர்; ஆயினும்
அடுத்து வீழ்த்திடும் திறமைமிக்கவர்!
அடியெடுத்து வைத்ததும், கண்ணெதிர்
அங்கு நின்றவோர் தமிழனைப் பார்த்து, " இப்
படி அமர்ந்திடும் பண்புடைதென்னவ!
பாரில் உம்புகழ் பரவக் காண்கிறோம்!
மிடிமை இல்லதாம் உங்கள் தாயகம்!
வீரர் தேயமாம்! கேள்வியுற்றனம்!
எனில் உமக்கொரு தெய்வம் இல்லையாம்
என்ன மோசம், இஃதாண்டவன் ஏற்பரோ!"
என்றதும் தமிழ் ஏறுகூறுவன்;
" ஏன் இலை! கதிரோன் ஒரு தெய்வமாம்!
எழில் நிலாவும் யாம் போற்றிடு தெய்வமாம்!
என்று கூற அவ்வீணர்கள் யாவரும்
எழுபதாயிரம் கடவுள்கள் கூறி, அக்
கடவுள் யாவரும் வானில் உண்டெனக்
கதையளந்தனர் கற்பனை பொங்கிட!
பொய்யலால் சிறு மெய்யுமிலாமலே
புவியில் வாழும் திறம்மிகு ஆரியர்
சொன்ன யாவையும் தமிழன் ஏற்றனன்!
சூழ்ச்சி வென்றது! நாடு சாய்ந்ததே!
கடவுள் வாசலைக் காத்தனர் ஆரியர்!
கன்னியர் சுகக் கட்டிலைக் காட்டினர்!
வீரம் முற்றும் ஒழிந்தது நாட்டிலே;
வேத மந்திரம் நுழைந்தது ஏட்டிலே!
தீறமாண்டு ஆரியப் பெண்களின்
திருவிழிக்குள்ளே சாய்ந்தனர் தென்னவர்!

(தொடரும்)

கதாநாயகன் ஆகிறீரா?

சீமையிலே ஒரு புதிய தொழில் ஆரம்பமாகி யிருக்கிறது, அதாவது யாரை வேண்டுமானாலும் ஒரு கதாநாயகன் ஆக்கிவிடுவதற்காக ஒரு கம்பெனி தொடங்கப்பட்டிருக்கிறது!

அந்தக் கம்பெனியின் விளம்பரம் இதுதான்: "நீங்கள் ஒரு கதாபாத்திரம் ஆக விருப்பமா?—அப்படியானால், உடனே உங்கள் போட்டோப் படம் ஒன்றை அனுப்புங்கள்; அல்லது, உங்களுடைய அங்க அடையாள லட்சணங்களை விவரமாய் எழுதியனுப்புங்கள். உங்களுக்குப் பிடித்தமான விளையாட்டு என்ன, நீங்கள் செய்யும் தொழில் யாது என்ற விவரமும் தெரிவியுங்கள், கூடவே ஒரு பவுன் பணம் அனுப்ப மறக்கவேண்டாம். உங்களை ஒரு கதாநாயகன் அல்லது நாயகி ஆக்கிய அசல் சிறு கதையொன்றை முதல்தரக் கதாசிரியர் ஒருவரைக் கொண்டு எழுதச் செய்து, வெகு சீக்கிரம் தபால் மூலம் அனுப்புகிறோம்."

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிகலப மாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் தத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 பழைய கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

கர்ப்பதடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 206.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம், போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1,
134. SERANGOON ROAD.
NEW COLOMBO MEDICAL STORES 82 MAIN St.

அடுத்த இதழில்: பன்மொழிப்புலவர், கா. அப்பாத்துரை, எம்.ஏ., எல்.டி., (விசாரத்)

மாஸ்கோவா? காஞ்சீபுரமா? என்பதுபற்றி எழுதுகிறார்.

சிரிப்புத்தான் வருகுதையா!

தற்பெருமை, தலைக்கனம், சுயபுராணம் என்றெல்லாம் சில வார்த்தைகள் பழக்கத்தில் இருந்து வருகின்றன. இவை எல்லாவற்றிற்கும் அர்த்தம் ஒன்றுதான். ஆகையால் இவற்றில் எதையும் இடம் நோக்கி பயன்படுத்த வேண்டும். தற்பெருமை பேசுகிறவர்களிடம் நாம் நீண்ட நாளைக்கு நட்புக் கொள்ளமுடியாது. யாரால் அது முடியுமென்று கேட்டால், எதற்கும் "ஆமாம்" போட்டு காரியம் சாதித்துக்கொள்கிறவர்கள் இருக்கிறார்களே, அவர்களால்தான் முடியும். கொஞ்சம் புத்தி உள்ளவர்கள் எதிர்த்துக்கேட்டு பகையை வளர்த்துக்கொள்வார்கள். ஆகவே, தற்பெருமைக்காரர்களிடம் இடையறாத நட்பு பாராட்டுவதற்கு நாம் ஒன்று முட்டாளாகவே இருக்கவேண்டும் அல்லது முட்டாளாக நடிக்கத் தெரிந்தவர்களாயிருக்க வேண்டும்.

* * *

"நாம் எழுதியதைப் படித்தீர்களா?" என்று ஒரு தற்பெருமைக்காரர் திடீரென்று கேட்டு வைப்பார். நாம், "ஓ எஸ்" போட்டால் தப்பினோம். "இல்லையே!" என்று கூறினோமோ செத்தோம்!

"நான் எழுதியதைப் படிக்கவில்லையா? பிறகு என்ன வேலைதான் செய்கிறீர்!" என்று திடுதிப்பென்று போடுவார்! அதாவது, அவர் எழுதுவதைப் படிப்பதொன்றுதான் உலகத்திலுள்ள அத்தனை பேரின் வேலை என்பது அவரது திண்ணமான முடிவு! உலக மகாஜனங்கள் அதைத் தவிர வேறொன்றையும் படிப்பதில்லை என்பது, அவர் தினசரி காணும் கனவு. நம்மை அவர் பைத்தியக்காரர்களாகக் கருதுவார்!' நமக்காக பரிதாபப்படுவார். நாம் படுகிற பரிதாபத்தை சாடையாகக்கூட அவர் உணரமாட்டார்.

"எனது அந்தக் கதையில் கதாநாயகி இப்படிச் செய்கிறாள்..." என்று ஒரு இடத்தைக் கூறிவிட்டு, நமது முகத்தைப் பார்ப்பார். நாம் உடனே பலாத்காரமாக முகத்தில் மலர்ச்சியை வரவழைத்துக்கொண்டு, உதட்டைக் கிழித்து ஒரு சிரிப்பை வீச வேண்டும். இல்லையேல், "எங்கேய்யா ஞாபகம்!" என்று கோபிப்பார். அது ரொம்ப மட்டமான இடமாக இருக்கும். ஆனாலும் அப்போது அதைச்சொல்லக் கூடாது. சொன்னால் தர்க்கத்திலேயே நம்மை அடித்து நொறுக்கி விடுவார்!

"நான் செய்வதென்றால் அப்படிச் செய்வேன்; இப்படிச் செய்வேன் என்னய்யா சரிதானே?" என்று நம்மிடமே கேட்பார், அப்போது நாம், கடிகாரத்தின் 'பெண்டுலம்' மாதிரி தலையை ஆட்டிக்கொண்டே இருக்கவேண்டும். தொண்டை எட்டிய மட்டிலும் கத்துவார்; "இது வீர ரசம்" என்பார். "ஆகா ஆகா!" போட வேண்டும்; இல்லையேல் நம்மைக் கோழையாக்கி விடுவார். இப்படி, தற்பெருமையாளரின் நண்பனாக இருப்பதற்கு தனி 'குவாலிபிகேஷன்' வேண்டும். முக்கியமாக, "எருமைப் பொறுமை" வேண்டும்.

* * *

அலெக்ஸாண்டர்டூமாஸ் என்ற ஆங்கில எழுத்தாளரிடத்தில் ஒரு இளம் எழுத்தாளர் வந்தார். "நான் அப்படி எழுதுவேன் இப்படி எழுதுவேன். ஷேக்ஸ்பியரைத் தூக்கி சாப்பிடுவேன். பெர்னாட்ஷாவை பிச்சை வாங்க வைப்பேன்" என்கிற ரீதியில் வந்தவர் பேசினார். இடையில் டூமாஸ் ஏதாவது பேச முயன்றாலும் அவர் விடவில்லை. கடைசியாக, எல்லாவற்றையும் அவரே பேசி முடித்துவிட்டு, "நான் இப்போது என்ன செய்யவேண்டும்? சொல்லுங்கள். செய்து காட்டுகிறேன்!" என்றார், டூமாஸ் சுருக்கமாக, "ஒரு நல்ல வைத்தியரைப் பாருங்கள்" என்றார்.

அடுத்த இதழில் :

ஈ. வி. கே. சம்பத் எழுதுகிறார்.

* * *

பெர்னாட்ஷாவுக்கு இந்த மாதிரி தற்பெருமை அதிகம். ஆனால் உலகில் பலர் அதை ஒப்புக்கொண்டனர். அதை நகைச்சுவையாகக் கருதினர். ஆனால் சின்னவர்கள் அதைக் கையாளும் போதுதான் சகிக்கமுடியாமற் போகிறது! பெர்னாட்ஷாவை சிலர் இந்த விஷயத்தில் வெறுத்தார்களென்றால் மற்றவர்கள் எந்த மூலை!

ஆழம் உள்ள இடத்தில் அலை குறைவாகத்தான் இருக்கும்; மரங்கள் அடர்ந்த இடத்தில் காற்று, மந்தமாருதமாகத்தான் வீசும். பொட்டல் வெளியில்தான் சண்டமாருதம் பிறக்கிறது. நிறைகுடம் தளும்பாது. வீரன் பேசிக்கொண்டே இருக்கமாட்டான். அறிவாளி எவ்வளவுக்கெவ்வளவு வாயை மூடுகிறானோ அவ்வளவுக்கவ்வளவு மதிப்பு! 'நான்' எனும் அகந்தை நாசத்தின் முதற்படி. தலை கனத்தால், மடி சுருங்கிப் போகும். இதெல்லாம் நெடுநாள் பழமொழிகள்.

* *

இலக்கியத் துறையிலே எனக்குஒரு நண்பர் இருந்தார், அவர் கூட்டங்களில் பேசும் போது, சில இடங்களில் கைதட்டு விழும் என்று கருதி அந்த இடத்தை அழகாக, பலமாகக் கூறிவிட்டு நிறுத்துவார். ஜனங்கள் பேசாமல் இருப்பார்கள். உடனே திரும்பச் சொல்லுவார். "என்ன இந்த ஜனங்கள்! கொஞ்சங்கூட ரசிக்கத் தெரியவில்லையே!" என்று அதாவது ரசிக்கக்கூடிய சரக்கை எடைபோட்டு அவர்கொடுக்கிறாராம்; மக்களுக்கு அது புரியவில்லையாம்' உடனே அவர் கண்களில் அங்கிருக்கும் ஆயிரக்கணக்கான மக்களும் மூடர்களாகி அவர் மட்டுமே புத்திசாலியாக நிற்பார்!

இன்னொருவர் இருக்கிறார். இவர் நிலைதான் மிகவும் வேடிக்கை. இவர்பற்றி பின்பு பார்ப்போம்! *

குடியானவன் ராஜாவானால்....

பழைய ருஷியாவிலிருந்த குடியானவ சிப்பாய் ஒருவனை, ஒரு பத்திரிகைக்காரன் பின்வருமாறு ஒரு சமயம் கேட்டான்:—"உன்னை ருஷியாவின் ஏக சக்ராதிபதியான ஜார் அரசனைச் சிம்மாசனமேற்றிவிட்டால், நீ என்ன செய்வாய்?"

குடியானவன் மிகவும் ஆழ்ந்து யோசனை செய்துவிட்டு, பிறகு அளித்த பதிலாவது:—"முதலில் மிக ஜோரான ஒரு ஜோடி பூட்ஸ் வாங்குவேன். அப்புறம், போர்ஷ் என்ற ருஷிய சூப்பு நிறையக் கொண்டுவர உத்திரவிட்டு, என்னால் முடிந்த வரையில் அதைக் குடிப்பேன். அதன்பின், 100 ரூபிள் காசுகளைத் திருடி, அவற்றை உதை உதை யென்று உதைப்பேன்."

தென்றல்

பாரதி மலர்

—○—

★ அழகிய முகப்புடன், அருமையான கதை' கட்டுரைகள் நிறைந்தது.

★ பக்கத்திற்குப் பக்கம் படங்கள்.

★ கண்ணதாசன், பாரதிபற்றி எழுதும் கட்டுரை, கவிதை.

★ விலை அணா எட்டுத்தான். முன்பணம் அனுப்புபவருக்கே தரப்படும். வி. பி. கிடையாது.

தென்றல்

2, சண்முகமுதலி தெரு, சென்னை–14.

எமது புதிய வெளியீடு

அரசியல்.... இலக்கியம்.... கடவுள்கள்.... கலைகள்.... மதகொள்கை

— தொழில்கள்........ விழாக்கள்........ பண்புகள் —

இவைகள் அனைத்தும் இடம்பெறும் சரித்திர வரலாறு

நாவலர் இரா. நெடுஞ்செழியன், M.A., எழுதிய

பண்டைக் கிரேக்கம்

விலை ரூ. 1—0—0

திராவிடப் பண்ணை

தெப்பக் குளம், : : திருச்சி.

Printed at Ponni Achakam, Madras-1. Editor & Publisher KANNADHASAN, 2, Shanmuga Mudali Street, Madras-14